THE COUNTRY HERALD.

கிராம தூதன்.

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்".

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், சீவில்லிபுத்தூர்.

மலர்: ௩ | 1941, செப்டம்பர்—விசு, புரட்டாசி | இதழ் ௯

1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை.

தீயினுள் தெறல் நீ பூவினுள் நாற்றம் நீ
கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ
அறத்தினுள் அன்பு நீ மறத்தினுள் மைந்து நீ
வேதத்து மறை நீ பூதத்து முதலும் நீ
வெஞ்சுடர் ஒளியும் நீ திங்களுள் அளியும் நீ
அனைத்தும் நீ அனைத்தினுட் பொருளும் நீ ஆதலின்
உறைவும் உறைவதும் இலையே; உண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமா ரனையை.

பரிபாடல்.

நீ தீயினுள் தெறல் (வெம்மை); நீ பூவினுள் நாற்றம் (மணம்); நீ கல்லினுள் மணி; நீ சொல்லினுள் வாய்மை; நீ அறத்தினுள் அன்பு; நீ மறத்தினுள் மைந்து (வன்மை); நீ வேதத்து மறை; நீ பூதத்து முதல்; நீ வெஞ்சுடர் (ஞாயிற்றில்) ஒளி; நீ திங்களுள் (நிலாவில்) அளி (குளிர்ச்சி); அனைத்தும் நீ; அனைத்தினுட் பொருளும் நீ; ஆதலின், (நீ) உறைவும் (தங்குமிடம் என்பதும்) உறைவதும் (தங்குதலென்பதும்) இலையே (இல்லை); உண்மையும் (உண்மையில்) (நீ) சிறப்பின் (சிறந்த) மறவியில் (மறதியில்லாத) மாயமாரனையை (மாயமாகவே இருக்கின்றாய்.)

2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்.

1. நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

ஔவையார்.

நல்வாழ்வு என்பது உலகவியற்கையில் இல்லை; அவரவர் உள்ளவியற்கையிலேதான் இருக்கிறது. உலகம் ஒன்று, நாடாயிருக்கட்டும்; ஒன்று, காடாயிருக்கட்டும்; ஒன்று, பள்ளமாயிருக்கட்டும்; ஒன்று, மேடாயிருக்கட்டும். எந்த இடத்தில் மக்கள் நல்லவரோ, அந்த இடத்தில் அந்த உலகமும் நல்லதாயிருக்கிறது.

2. நீங்கள் எந்த நிலைமையிலும் கௌரவமுள்ள மனிதர்களாக இருக்கவேண்டும். அற்பப் புத்தியும் அற்பச் செட்டும் உங்களை நெருங்கிவரவும் விடக்கூடாது. யாருக்கும் ஆசைவார்த்தை சொல்லி ஏமாற்றக்கூடாது. அடுத்தவர், சார்ந்தவர்கட்கு உங்களாலான உதவி உபகாரத்தை நீங்கள் மனதோடு தாராளமாகச் செய்தல் வேண்டும். சின்ன மனிதர்களிடம் உறவாடுவதும் பகைத்து நிற்பதும் உதவாது. ஒருவரிடம் இல்லாத குணத்தைப் புகழ்ந்து கூறி ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ள நினைத்தல் கூடாது. எந்தச் சமையத்திலும் யாரிடத்திலும் உள்ளதை உள்ளவாறு பேசவேண்டும். அப்படிப் பேசுவதால் ஏதாவது தீங்குண்டாகுமெனின் மௌனமே நல்லது. நிதானமில்லாத மனிதரின் கூட்டுறவும் நட்பும் அறவே நீக்கப்படவேண்டும். பெரும் பணம் வேண்டுமென்ற ஆசையும் பெரும் பணத்தில் ஒரு பிரேமையும் இருக்கவே கூடாது. நம்முடைய காரியத்திற்கு ஒருவரைக் கெஞ்சிக் கேளாமல் ஒருவர் தயவை எதிர் பாராமலிருந்தால் அந்த நிலைமையையே ஒரு கோடீசுவரனின் நிலைமையாகக் கருதிக் கொள்ளலாம். அதற்குமேல் மனிதன் நினைப்பதும் வேண்டுவதும் வீண் சுமையேயாகும். எப்போதும் சிறு செலவுகளைத் தாராளமாகச் செய்தல் வேண்டும். பெருஞ் செலவுகளை நிதானித்து அடக்கமாகச் செய்தல் வேண்டும்.

இளைஞருக்கு ஆலோசனை,

மகிபாலன்பட்டி சின்னையாசெட்டியார்.

3. தூய வாழ்வைத் துலக்குவோம் மேடையில்;
சோக மோகத் துயரை விலக்குவோம்;
நோய் நுடக்கந் தவிர்த்து வளருவோம்
நுட்பமான கலைதரு நோன்பினால்,
நேய மன்பு, சம நிலை, யொற்றுமை
நேர்மை, நல்குங் கலைநெறி பற்றினால்,
ஆயிரம் வகை யின்ப மடைகுவாம்;
அமுதை யுண்ணச் சலிப்பவர் யாவரே ?

நாடகக்கலை. சுத்தானந்த பாரதி.

3. தலையங்கம் :

தபசில் வகுப்பினரும் மற்றும் பின்னடைந்த வகுப்பினரும் முன்னேறுவதெப்படி?

IV

தலைவர்களும், தொண்டர்களும் முதலாவதாக இனமுன்னேற்ற வேலைகளில் ஈடுபடக் கூடியவர்களைத் தெரியவேண்டும்.

முன்னேறிவரும் இனங்கள் விருத்திக்கான முறைகளைத் தாமாகவும் கைக்கொள்ளுகின்றன. பிறரைப் பார்த்தும் கேட்டும் அவற்றையும் தவறாது பயன்படுத்திவருகின்றன. விருத்தியாகிவரும் குடும்பங்களிலும், குடும்ப விருத்தியில் ஒவ்வொருவரும் அக்கறைகொண்டவர்களாகவும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுச் செய்வதுபோலவும் ஒன்று சொன்னாற்போலவும் குடும்ப விருத்திக்கான காரியங்களைச் செய்துவருவதையும் பார்க்கிறோம். எந்த அபிவிருத்திக்கும் பின் அபிப்பிராயம் இல்லாதிருந்தால் மட்டும் போதாது; ஏக மனதாக ஈடுபடுவதாயிருந்தாலும்போதாது; ஒவ்வொருவரும் தீவிரமாகவும் ஈடுபடவேண்டும். தபசில் வகுப்பினர்களிலும் மற்றும் பின்னடைந்த வகுப்பினர்களிலும் அபிவிருத்திக்கு இன்றியமையாத இத்தருணங்களை யெல்லாம், அவர்கள் பின்னடைந் திருப்பதற்குத் தக்கதாக, காண்பதும் அரிதாகும். அதுமட்டு மல்ல. அவர்களில் ஒருவர் போன வழி ஒருவர் போவது மிருக்காது; இனத்துக்குள்ளே தன்னைப்போல் தனக்கு அடுத்தபடியாக வேறொருவர் நன்றாக வாழ்வதும் பிடிக்காது. வீண் ஆரவாரங்களாலும் ஆடம்பரங்களாலும் இனம் முன்னேற்றம் அடைந்திடக்கூடுமென் றெண்ணியும் ஒவ்வொருவரும் தன் தன் யோசனையையே பெரிதாக நினைத்தும் அதனையே பிறரும் கையாள வேண்டு மெனப் பேசுவதாயுமிருக்கும். கணக்குத் தெரியாதவன் வீட்டில் விடிந்த பொழுதிற்குச் சண்டை யென்றது போல விவேகமில்லாமல் சண்டையும் போட்டுக்கொள்ளுவார்கள். வெளியிலிருந்து எவரும் அவர்களைப் பார்க்கப்போனால், அவருக்கு அவர் விரும்பாத வகையிலும் அதிகமாகவும் நான் நீ என்று போட்டி போட்டும் உபசாரம் செய்வார்கள். அவ்வளவில் அவர்களுக்கு இன அபிமானம் இருக்கிறதென்றேனும் இன முன்னேற்ற வேலைகளிலும், உபசாரத்தி லீடு பட்டது போல, ஈடுபடக் கூடுமென்றேனும், எண்ணிவிடமுடியாது. பிறர் நம்மைப் பெருமையாக நினைத்துக்கொள்ள வேண்டு மென்று ஆசைப்படுவதும் அதற்கான காரியங்களைச் செய்வதும் மனித சுபாவம். அதனை அவர்களிடத்தில் அதிகமாகவுங் காணலாம். இன முன்னேற்றத் தொண்டர்கள் இனத்தின் கேவலமான நிலைமையை உணர்ந்திருந்தாலும் போதாது; அதனைப் பற்றிய கவலையும் அவருக்கிருக்கவேண்டும். வெகு காலமாகக் கேவலமான நிலைமையிலிருந்து வருபவர்கள் தங்கள் நிலைமையைக் கேவலமென உணர்வதும் சிரமப்படும். இப்படியாக, இனமுன்னேற்றத்தில் கவலைகொண்டிருப்பவர்களைத் தேடிப்பிடித்துத்தான் ஆகவேண்டும். விசாரணையாலும் பேச்சுக்கொடுத்துப் பார்ப்பதாலும் அப்படியாட்களிருந்தால், அவர்களைக் கண்டுகொள்ளவும் முடியும். சிலர் விதரணையாகவும், ஊக்கமாகவும் பணிவிடை தான் செய்யக்கூடியதாக இருக்கும்; சிலர் தம் செல்வாக்கையும் பணத்தையும் உதவ முடியும்; விதரணையாக எதனையும் செய்துகொள்ள முடியாது. ஒரே ஊரில் அப்படி யாட்கள் அமைந்தால் அவர்களிருவரையும் இணைத்தேனும் முன்னேற்ற வேலை

களைச் செய்துவரலாம். அப்படியும் அமைந்திருக்கவில்லை யென்றால், அப்படி யமையுங் காலத்திற்கு முன் வேலையை ஆரம்பிப்பதிலும் பிரயோசனமில்லை.

தலைவர்களும் தொண்டர்களும் செய்யவேண்டிய வேலை.

முதலாவதாக இனத்தாரில் எத்தனை குடும்பங்களிருக்கிற தென்றும் அவற்றின் கல்வி நிலைமை, செல்வ நிலைமை, தொழில் நிலைமை முதலியனவும் தெரியவேண்டும். கோவில், சத்திரம், பஜனைமடம், சாவடி, நந்தவனம் முதலியன உண்டென்றால் அவற்றின் நிலைமையும் தெரியவேண்டும். சிறுவர், சிறுமிகள் விளையாடுவதற் கேற்ற இடம் உண்டா வென்றும் தெரியவேண்டும். பொதுச்சொத்துக்களில்லை யென்றாலும், இருந்தும் சௌகரியமாக இல்லை யென்றாலும் அவற்றை அமைத்துக்கொள்ளவும் சௌகரியப்படுத்திக்கொள்ளவும் முடியுமா வென்பதையுந் தெரியவேண்டும்; முடியுமென்றால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் வேண்டும்.

இரண்டாவதாக, பிரசாரத்திற்காக வாலிபர் சங்கமும் பொருளாதார விருத்திக்காகக் கூட்டுறவுச் சங்கமும் மற்றும் சமுகச் சீர்திருத்தத்திற்கும் ஒழுக்கத் திருத்தத்திற்கும் உதவக்கூடிய தாபனங்களையும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

மூன்றாவதாகக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக இன முன்னேற்றத்தில் ஆர்வம் ஏற்படும்படியாகவும் ஒவ்வொருவரும் சோம்பியிராது தொழிற் செய்யும்படியாகவும் மிச்சம் காணும்படியாகவும் தூண்டி வரவேண்டும்.

நான்காவதாக, பந்துக்களுக்கும் இனத்தாருக்கும் வேண்டிய உதவிகளைச் செய்து இனத்தாரை முன்னேற்றியவர்களின் சரித்திரம், ஏழைகளாயிருந்து பணக்காரர்களானவர்களுடைய சரித்திரம், மகான்கள் வீரர்களுடைய சரித்திரம் முதலியனவற்றைப் பலரும் கேட்கும்படியாக வாசித்தும் விளக்கியும் வரவேண்டும். தொழி லபிவிருத்தி பற்றியும் நாகரிகமாக வாழ்வதைப் பற்றியுமுள்ள நூல்களையும் பத்திரிகைகளையும் விளம்பரங்களையும் வாசித்துக்காட்டி அவற்றை அனுஷ்டித்து வரவும் தூண்டவேண்டும். இத்தகைய பிரசுரங்களைத் தாங்களாகப் படித்துக் கொள்ளத் தெரிய வேண்டுமென்று, எழுதப் படிக்கத் தெரியாதவர்களும் ஆசைப்படும்படியாகச் செய்ய வேண்டும். அவர்களுக்கு எழுதப் படிக்கவும் சொல்லி வைக்க வேண்டும். புத்தகசாலை வாசகசாலை யொன்று ஏற்படுத்தி நல்ல புத்தகங்களையும் பத்திரிகைகளையும் அதில் சேர்த்து அவற்றை எல்லாரும் பயன்படுத்தி வரவும் செய்யவேண்டும்.

ஐந்தாவதாக, சிறு பிள்ளைகளே இனத்திற்கு உயிராக இருப்பதால், அவர்களை எப்பாடு பட்டேனும் 11வயது வரைக்காவது திடமாகவும் சுகமாகவும் வளர்த்து வரவும் சொல்ல வேண்டும். அவர்கள் ஆடியோடி விளையாடித் திரிவதற்குச் சௌகரியமாக விளையாட்டிடமும் அமைக்கவேண்டும்.

ஆறாவதாக, வயது வந்தவர்களின் ஊண் குறைவை ஒருவாறு பின்சரிக்கட்டிக்கொள்ளக் கூடுமாயினும் தூக்கக்குறைவை அப்படிச் சரிக்கட்டிக்கொள்ள முடியாதாதலால், எக்காரணத்தையிட்டும் தூக்கத்தைக் கெடுத்துக் கொள்ளாதேனும் இருந்துவர இனத்தாருக்குச் சொல்லவேண்டும்.

ஏழாவதாக, இனச்சிறுவர் சிறுமிகளைக் கொண்டு, இனத்தின் கேவலமான நிலைமையையும் அதே நிலைமையிலிருந்த பிற இனத்தார்கள் முன்னேறி வருவதற்காகச் செய்துள்ள வேலைகளையும், இனத்தின் நிலைமையைப் பற்றிய கவலையும் வருத்தமும் பார்ப்போர் கேட்போர் எவருக்கும் பசுமரத்தாணிபோல் பதியும்படியாகச் சிறுசிறு நாடகங்களைப் புதிது புதிதாகவும் நடத்திவர வேண்டும். இத்தகைய நாடகங்களுக்கு எவரும் தவறாமல் வரவேண்டு

மென்ற கட்டாயமும் வேண்டும். இவை ஒவ்வொருவர் உள்ளத்திலும் மான ரோசத்தைக் கிளப்புவதுபோல் வேறெதுவும் செய்யாது. மேடைப்பிரசங்கங்களும் மேளதாளங்களும் ஏகதேசம் தோன்றக்கூடிய கவலையையும் மழுப்பிவிடும்.

எட்டாவதாக, சிலவாரங்களுக்கு அல்லது சில மாதங்களுக்கொரு தடவையாக ஊர்க் கூட்டம் கூடி அதுவரை ஏற்படுத்தி யிருக்கிற திட்டங்கள் நடந்து வருவதைக் கவனிக்கவும் வேண்டும்; பின்னும் உற்சாகமூட்டி அவற்றைத் தீவிரமாகச் செய்து வரவும் தூண்டவேண்டும். ஊரில் வரும் விவகாரங்களையும் கச்சேரிகளுக்குப்போய் வீண் செலவுகள் செய்து கெட்டுப் போகாமல், அங்கணைக்கங்கணையே தீர்த்துவிடவும் வேண்டும்.

(கிராம முன்னேற்றம் தேசமுன்னேற்றம் சம்பந்தமாகக்கல்விச்செல்வம் பொருட்செல்வம் தேகதிடம் சுகம் இவற்றைப் பெருக்கிவர வேண்டியதைப் பற்றி, இதற்கு முன்னும் பல கட்டுரைகளும் குறிப்புகளும் இப்பத்திரிகையில் விரிவாக எழுதி வந்திருக்கிறோம். இனிமேலும் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் எழுதி வருவோம். அவற்றைக் கவனித்துக் கொள்க. ப—ர்.)

மா நாடுகள்

முன்னேறிவர ஆசை கொண்டிருக்கும் சில இனத்தார்கள் பல மாநாடுகள் கூட்டிவரப் பார்க்கிறோம். அங்கெல்லாம் உற்சாகமும் தற்காலிகமாக ஏற்படுகிறது. பேச்சுக்களுக்கும் தீர்மானங்களுக்கும்குறைவிருக்கிறதில்லை.முன் செய்த தீர்மானங்களின் போக்குத்தானே, அப்பொழுது செய்யும் தீர்மானங்களுக்கும் அமையு மென்பதையும் நினைப்பதில்லை. இப்படியாக, ஆயிரக்கணக்கான பணத்தையும் பந்தல்களிலும் மேளதாளங்களிலும் வாணவேடிக்கைகளிலும், ஊட்டுப்புரைகளிலும் வீணுகச் செலவழித்து வருகின்றனர்.

இதுவரை முன்னேறிவந்திருக்கும் குடும்பங்களும் இனங்களும் ஆரவார ஆடம்பரச் செலவுகளில்லாமலே முன்னேறிவந்திருக்கவும் காண்கிறோம். இப்படிச் செலவுகளால் இனத்தின் செல்வம் குறைவதன்றிக் கூடுவதில்லை.

மாநாட்டுக்காக வருகிற பணக்காரர்களும், படித்தவர்களும், அதிகாரிகளும் தங்களுக்கெனத்தனித்த இடங்களி லிருந்துகொள்ளுகின்றனர். அவர்கள் தங்கள் இனத்தைச் சேர்ந்த ஏழைகளோடிருந் துண்பதும் அளவளாவிப்பேசுவதுங்கூடக்கேவலமென்றுநினைக்கிறார்கள். அங்கே கூடும் ஏழைகள், நம்மினத்தில் பணக்காரர்கள் படித்தவர்கள் அதிகாரிகள் இருக்கிறார்களென்று தெரிந்துகொள்வதைத் தவிர, அவர்களுடைய நிலைமையில் மற்றவர்களுக்கு எவ்விதக் கவலையும் உண்டாவதில்லை; அந்த நிலைமையை மாற்றுவதற்கு உதவுபவருமில்லை.

மாநாடுகள் கூடுவதென்றால், காரிய மாநாடுகளாக இருக்கவேண்டுமே தவிர வெறும் பேச்சுமாநாடுகளால் ஆவதொன்றுமில்லை. விபசாயமே முக்கியத் தொழிலாக உள்ளவர்களென்றால், விபசாயக் கண்காட்சி யமைக்க வேண்டும்; விபசாயம் திறமையாகச் செய்கிறவர்களுக்குப்பரிசுகளும் தரவேண்டும்; விபசாயத்தைப் பின்னும் எப்படியெல்லாம் விருத்தியாகச் செய்துவரலாமென்பதைப் பேசி அப்படிச் செய்துவரத் தூண்டவும் வேண்டும். மாநாட்டுக்குப் போவதால், பணம்தான் செலவாகிவிடுகிறதென்று எவரும் நினைப்பதற்கில்லாமல், அதிகப்பணம்சம்பாத்தியம் செய்வதற்கான பல யோசனைகள் தெரிந்து வந்தோம்; அப்படியே சம்பாத்தியமும் செய்து வருகிறோமென்று நினைக்கும்படியாக இருக்கவேண்டும். மாநாட்டுக்கு வரும் பணக்காரர்கள் தங்களாலியன்ற பணஉதவியை—இனுமாக அல்ல, வட்டியில்லாதகடனுகக்குறைந்தவட்டிக்கடனுக இனத்தாரின் அபிவிருத்திக்காக அவர்களுக்குதவ முன்வர வேண்டும். ஏழைகளாயிருந்து பெரும் பணம் திரட்டி யிருப்பவர்களும் படித்திருப்பவர்களும் தங்களனுபவத்தையும் இனத்தாருக்குச் சொல்லி அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். மாநாடுகளில் ஆவேசத்தை உண்டுபண்ணுவது பெரியகாரியமல்ல; அதனைப் பயன்படுத்தி விருத்தியாக்கவும் வேண்டும்.

குறிப்பு:— "சென்ற ஜுன் முதல், இத்தலைப்பின் கீழ் அப்போதைக்கப்போது தோன்றிய கருத்துக்களை ஒரு முறைப்படுத்தி எழுதி வந்தோம். இப்பொழுது அவற்றையெல்லாம் சேர்த்துப்பார்க்கும் பொழுது (ஜுன்) பிற்காலதற்கால நிலைமைக்குப் பின் (ஜுன்)படிப்பிலும் பணமே அவசரமாக வேண்டும்." என்பதனையும், அதன் பின் (ஜுலை) ஒரு சிலர் படித்து உத்தியோகம் பெறுவது போதாது' என்பதனையும், அதன் பின், (ஜுன்) முன்னேறியிருக்கும் வகுப்பினர் அவசியம் பிறவகுப்பினர் முன்னேறுவதற்கும் உதவ வேண்டும்' என்பதனையும், அதன்பின், (ஜுலை) இன முன்னேற்ற வேலைகளுக்கேற்ற தலைவர்கள் தொண்டர்கள் வேண்டும்' என்பதனையும், அதன்பின் (ஆகஸ்டு) தன்னலங்கருதாத் தியாகிகளே பொது நல ஊழியத்திற்கேற்றவர்கள்' கிராம ஆசிரியர்களேனும் இன முன்னேற்ற வேலைகளில் ஈடு படுவார்களென்றால், இப்போதைய நிலைமையில் அதுவுமே பெரும் பாக்கியமாகும்' என்பவற்றையும், அதன்பின் (செப்டம்பர்) தலைவர்களும் தொண்டர்களும் முதலாவதாக இன முன்னேற்ற வேலைகளில் ஈடுபடக்கூடியவர்களைத் தெரியவேண்டும்' என்பதனையும் அதன்பின், (ஜுலை) இனமுன்னேற்ற வேலைகளையேற்று அவற்றைத் தாங்களாகவும் விருத்தியாகச் செய்துவர முதலாவதாகச் சனங்களைத்தயார் செய்ய வேண்டும்' என்பதனையும், அதன்பின், (ஜுன்) வறுமைப்பிணி விரைவில் ஒழிந்திடும் என்னும் நம்பிக்கையும் சீக்கிரம் ஏற்பட வேண்டும்' என்பதையும் அதன்பின், 'தம் கையே தமக்குதவ வேண்டும்', தம் கையே தமக்கு உதவியாக, தலைவர்கள் தொண்டர்கள் தாமெதற்கு? என்பனவற்றையும் அதன்பின் செப்டம்பர்க்கட்டுரைப் பாக்கியையும் வாசிப்பது பொருத்தமாக இருக்குமென்று தெரிகிறோம். ஆதலால், இந்தக் கட்டுரையைத் திரும்பவாசிக்க விரும்புகிறவர்களை, இந்த வரிசைப்படி ஆரம்ப முதல் எண்ணிட்டுக்கொண்டு வாசிக்கக் கேட்டுக்கொள்கிறோம். இன முன்னேற்ற வேலைகள் சம்பந்தமாகவும், வாசகர்களுடைய அனுபவத்தை யறியவும் அதனை வெளியிட்டு வரவும் ஆவலோடிருக்கிறோம்.

---

4. வேளாண்மை:

நிலத்துக்குரமாகும் பயிர்கள்.

நிலங் கொழுக்கக் காணம் விதை;
கடலை விதைத்தால் கடுத்த உரம்.

சாதாரணமாக, நிலத்தில் ஒரு பயிர் விளைந்தபின், அதன் செழுமை குறைகிறது. ஏனெனில், நிலத்திலிருந்த உணவுப் பொருள்கள் அந்தப் பயிர் விளைவதற்கு வெகுவாகச் செலவாகிவிடுகின்றன. ஆனால், கடலைக்கும் காணத்துக்கும் மாத்திரம் நிலம் ஏன் உரப்பட வேண்டும்? இதற்குக்காரணமுண்டு; கடலை காணம் இப்பயிர்களைத் தவிர, மற்றும் பயற்றுஞ்செடிகளுக்கும் இந்தச் சத்தியுண்டு. அவை, (1) துவரை, (2) மொச்சை, (3) காராமணி, (4) சிறுபயறு, (5) சணல், (6) அவுரி (7) கொழிஞ்சி முதலியனவாம்.

எப்படி இப்பயிர்கள் நிலத்தை உரப்படுத்துகின்றனவென்று இப்பொழுது கவனிப்போம். மேற்சொன்ன பயிர்களின் வேர்களில் அனேககொப்புளங்கள் (Nodules) இருக்கின்றன. இக்கொப்புளங்களில் வசிக்கும் எண்ணிறந்த அணுக்கிருமிகள் (Bacteria) ஆகாயத்திலிருக்கும் காலகத்தை (Nitrogen) யிழுத்து இக் கொப்புளங்களில் சேர்த்துவைக்கின்றன. இப்பயிர் அறுவடையான பிறகு, வேர்களிலிருக்கும் கொப்புளங்கள் நிலத்திலேயே தங்கிப்போவதால் அவற்றிலிருக்கும் காலகம் பின்னர் பயிராகும் செடிகளுக்குப் பிரயோசனப்படுகிறது. ஆகாயத்தில் வாயுரூபமாக இருக்கும் காலகத்தை அணுக்கிருமிகள் மட்டுமே யிழுத்து நிலத்தில் சேர்க்கக்கூடுமாதலாலும், இப்பேர்ப்பட்ட அணுக்கிருமிகள், பயிற்றுஞ்செடி வேர்களில் மாத்திரம் வசிப்பதாலும், பயிற்றுஞ்செடிகளை மாற்றி மாற்றிச் சாகுபடி செய்வதால் நிலம் உரப்படுகிறது.

உழவர்களுக்கு இவ்வளவு உதவிசெய்யும் அணுக்கிருமிகளின் சரித்திரத்தைப் பற்றிச் சற்றே தெரிவதாலும் பலனுண்டு.

எக்காரணத்தால் இந்த அணுக்கிருமிகள் பயிற்றுஞ்செடி வேர்களில் மட்டும் வசிக்கின்றனவென்று திட்டமாகச் சொல்லுவதற்கில்லை. இவை நிலத்தில் ஏராளமாகக் காணப்படுகின்றன. நிலத்தில் பயற்றுஞ்செடி வேர்கள் தோன்றின உடனே, இவைபலாத்காரமாக அவற்றின் வேர்க்கால்களில் புகுந்து, வேர்களின் பல கிளைகளையும் தங்களுக்கு இருப்பிடமாக்கிக்கொள்ளுகின்றன. வேர்களுக்குள் பிரவேசித்தவுடனே, அவை விருத்தியடைந்து உருமாறுகின்றன. அவை தங்கள் உணவுக்காகச் செடிகளின் வேர்களிலிருந்து சருக்கரையையும் கனிய உப்புக்களையும் (Mineral Salts) எடுத்துக்கொள்ளுகின்றன. அவை வேர்க்கால்களினுட் பிரவேசிக்கும் பொழுது, தங்களால் இயன்றமட்டும் இச்செடிகள் தடைசெய்யினும், அவை மீறியே உட்செல்லுகின்றன.

இந்த அணுக்கிருமிகளுக்கு உபகார சிந்தையுமிருப்பதாகத் தெரிகிறது. செடிகளிலிருந்து சருக்கரை முதலியன எடுத்துக்கொண்டதற்குப் பதிலாக ஆகாயத்திலிருக்கும் காலகத்தை இழுத்து வேர்களிலிருக்கும் கொப்புளங்களில் சேர்த்துவைக்கின்றன. இந்தக் காலகம் செடிகள் இலகுவில் உபயோகித்துக் கொள்ளக்கூடிய பக்குவத்திலிருக்கிறது. செடிகளின் இளம் பருவத்தில் அணுக்கிருமிகள் வேர்க்கால்களினுள் பிரவேசிக்கச் சாத்தியமாகிறது. ஆனால் செடிகள் பெரிதாய் வளர்ந்த உடனே, இவ்வணுக்கிருமிகளில் அனேகத்தைச் செடிகள் செரித்துக்கொள்ளுகின்றன. தப்பிப் பிழைத்தவை, செடிகள் காய்ந்த உடனே நிலத்திலேயே தங்கி, மறுபடியும் பயற்றுஞ்செடிகளின் வருகையை எதிர்பார்த்தவண்ணமாயிருக்கின்றன.

பயற்றுஞ் செடிகளின் வேர்களில் கொப்புளங்கள் உண்டாவது நிலத்திலிருக்கும் காலகத்தின் குறைவைப்பொறுத்தது. நிலத்துக்கு ஏற்கனவே தழையெரு மாட்டுரம் முதலியன அதிகமாகச் சேர்க்கப்படுவதால், காலகம் அதிகமிருப்பின் அணுக்கிருமிகள்விருத்தியாகிக் கொப்புளங்கள் உண்டாவதில்லை. இப்பேர்ப்பட்ட நிலங்களில் செடிகள் செழித்து வளர்வதால், அணுக்கிருமிகளை அதிகமாக நெருங்க விடுவதில்லை. இம்மாதிரி நிலங்களில் பயற்றுஞ்செடிகள் சாகுபடியாயினும், காலகம் அதிகம் நிலத்தில் சேர்க்கப்படுவதில்லை.

கிருசிகன்.

---

5. கூட்டுறவு:

சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழக அறிக்கை.

XII

சில யோசனைகள்.

பொதுவுடைமையை அரசாங்கம் பழிப்பதால் பயனில்லை. குடிகள் பொதுவுடைமையை ஆதரிப்பதற்கில்லாதவிதமாக அரசாங்கம் நடந்துகொண்டால், எவர்தான் பொதுவுடைமையை ஆதரிக்கப்போகிறார்கள்! வயிற்றுக்கில்லாதவர்கள் பொதுவுடைமையினாலாவது தங்கள் சங்கடம் நீங்கிவிடாதா வென்று நினைக்கிறார்கள். பணக்கார நாட்டில் பணக்காரர்களுடைய சொத்தைப் பறிமுதல் செய்து பங்கிடுவதென்றாலும் பொதுவாக அனுபவிப்பதென்றாலும் எல்லாருக்கும் பயனிருக்கக்கூடும். நம் நாடுபோன்ற ஏழை நாட்டில் பங்கிடுவதனால் எவருக்கும் பயனிராது. பொதுவாக அனுபவிப்பதற்கும் நம் நாட்டினருக்குத் திறமையும் போதாது. (இதனை நாம் வருத்தத்துட

னேயே சொல்லுகிறோம். ஒரு சிலர் பிற நாட்டுத் தொழிலாளிகளைப்போல் அதற்கும் அதிகமாகக்கூட திறமையுடையவர்களாயிருக்கலாம். அது கணக்கில்லை. சாதாரணமாக, எப்படி யிருக்கிறதென்று பார்த்தோமென்றால், எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் அநேகமாக மண்வெட்டி பிடிக்கவும் விளைவதில்லை. மற்றவர்களும் பல தலைமுறைகளாக வளர்ந்துவரும் வறுமையினால் பாதிக்கப்பட்டுத் திடம் குறைந்தவர்களாகவே யிருக்கிறார்கள். வெப்பமான நாட்டில் சத்தான உணவு உண்டுகொண்டிருந்தாலும் திடம் குறையக்கூடியபொழுது, சரியான உணவுமில்லாத நிலைமையில் திடம் குறையாதிருக்கக்கூடியதில்லை.) தொடர்ந்தும், சலியாதுழைத்துவரக்கூடியதில்லை. நம் நாட்டின் பொதுக் குடும்ப வாழ்க்கை (Joint Family System) தனக்குத் தனக்கென்றால்தான் தாய்ச்சிலையும் பதக்குக் கொள்ளும்படி உழைக்கச்செய்திருக்கிறதேயன்றி, பொது வாழ்க்கையிலும் அவ்வளவு தீவிரமாக உழைக்கத் தூண்டிவந்ததில்லை. எவரையும் பட்டினியாக இருக்கவேண்டிய அவசியமில்லாத நிலைமைக்கு அரசாங்கம் கொண்டுவந்து விடுமென்றால், அரசாங்கத்தையும் எவர்தான் பழிக்கக்கூடும்? பொதுவுடைமையையும் எவர்தான் விரும்பக்கூடும்?

கூட்டுறவுமுறையொன்றினாலேயே எவரும் உண்மையாகவும் நன்மையாகவும் வாழக்கூடும் என்பதை நூற்றுக்கணக்கான வருட அனுபவங்களால் அறிந்துமிருக்கிறோம். அந்த முறையைச் சரிவர யனுசரித்த சில நாடுகளில் ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமலும் திருடர் பயமில்லாமலும் எவரும் பட்டினியாயில்லாமலும் இருந்துவரவும் பார்க்கிறோம். கூட்டுறவு முறையொன்றினாலேயே நம் நாட்டிற்கு விமோசனம் பிறக்கக்கூடும். பிறக்கவேண்டுமென்பதாகக் காங்கிரசு மந்திரிகள் உள்படத் தலைவர்கள் அனைவரும் நம் மே. த. அரசப் பிரதிநிதியும் பல விடங்களில் வற்புறுத்திச் சொல்லியிருக்கின்றனர். அதனைச் செயலில் காட்டத் தயங்குவதேன்? என்பதுதான் தெரியவில்லை.

அரசாங்கமும் தலதாபனங்களும் மற்றும் பொதுத் தாபனங்களும் போட்டியையொழித்துக் கூட்டுறவு முறையொன்றையே ஆதரிப்பதாக இருந்தால், ஏழைத் தொழிலாளிகளுக்கும் கூலியாட்களுக்கும் வயிறு நிறைய உண்பதற்கும் பஞ்சம் வருமோ? பணக்காரர்கள் பின்னும் பணக்காரர்களாய்க் கொண்டேயிருக்கவும் முடியுமோ? அப்படிச் செய்யத் துணியாதவரை நம் தலைவர்களிடத்தும் அரசாங்கத்தினிடத்தும் உண்மையில்லை யென்றுதானே சொல்லவேண்டும்?

இந்தச் சண்டையில், பிரிட்டிசரசாங்கம் உருசியாவோடும், சீனாவோடும் கலந்துகொண்டுவரும் நிலைமையில், சண்டை முடிவில் ஏழைத் தொழிலாளர்களின் ஆதிக்கம் வலுக்காமலும் இருக்க முடியாது. அப்பொழுது குழப்பங்களின் இடையேயும் செய்யவேண்டியதாக முடியும் திருத்தங்களின் போக்கிலேயே இப்பொழுதிருந்தே செய்துவருவதனால், குழப்பங்களைத் தவிர்த்துக்கொள்ளவும் முடியுமே!

கூட்டுறவுச் சங்க அமைப்பே, அதில் சேருகிற ஒவ்வொருவரையும் பல கட்டுப்பாட்டுக்குள்ளாக்கி நாளுக்கு நாள் தாமாகவே திருந்திவரச்செய்வதாக இருக்கவேண்டும். நல்ல சம்பாத்தியம் செய்துவருவதற்கும் மிச்சம் காண்பதற்கும் அதனைச் சேர்த்துவருவதற்கும் அது உதவ வேண்டும். பிறர்க்குப் பாதகமின்றி மட்டுமல்ல, சாதகமாக வாழ்வதற்கும் கட்டுப்பாடாகக் கடனைக் குறைத்தும்தற்காலிகமாக்கியும் மிச்சத்தை வளர்த்தும் வருவதற் குதவ வேண்டும். சங்கத்தில் யோக்கியமானவர்களையும்—தங்கள் நிலைமையைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்ற ஆசையு மிருந்து அப்படித் திருத்திக்கொள்ளவும் கூடுமென்றிருந்தால்மட்டும், சேர்ப்பதென் றிருக்கவேண்டும். அரசாங்க வளர்ச்சித்துறை இலாகாக்களும், மராமத்து, நிலவரி, கல்வி, சுகாதார, தலதாபன இலாகாக்களும் கூட்டுறவு சங்கங்களுடன் கலந்து அந்தந்தக் கிராமத்திற்கு அவசியமான திட்டத்தை யமைத்து அதனை அக்கூட்டுறவுச்

சங்கங்களின் மூலமாகவே நிறைவேற்றிவைப்பதற்கும் உதவவேண்டும். ஏழைத்தொழிலாளிகளுக்கும் கூலியாட்களுக்கும் — எவருக்குமே, அவரவர்களுடைய நிலைமைக்கும் தேவைக்கும் தக்கதான கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் தாபனங்களும் அமைத்துதவவேண்டும்.

நம் நாட்டில் புதைந்து மறைந்திருந்த செல்வமும் காதிலும் கழுத்திலு மிருந்தனவும் நம் நாட்டினின்றும் கழிந்துவிட்டன. எங்கும் வறுமையே வளர்ந்துவருவதுடன் அதனைச் சமாளிப்பதற்கான சமர்த்தும் குயுக்தியுமே வளர்ந்துவருகின்றன. பெற்றோர்களின் வறுமையும் பின் சந்ததியாரின் ஒழுக்கத்தை (Character) வெகுவாகப் பாதிக்கிறது. நம் மாகாணத்தில் ஆரம்பப் பள்ளிகள் அனேகமாக உதவிபெறும் பள்ளிகளாகவே (Aided Schools) யிருக்கின்றன. அப்பள்ளி ஆசிரியர்களின் வறுமையும் பின் சந்ததியாரின் ஒழுக்கத்தைக் கெடுத்தே வருகிறது. கிறித்துவ மகம்மதியப் பள்ளிகள் தவிர்த்து மற்றப் பள்ளிகளில் அனேகமாகச் சமய போதனை கிடையாது. எந்தப் பள்ளியிலும் மாணவ மாணவிகளின் ஒழுக்கத்தைச் செம்மைப்படுத்தித் திடம்பெற வளர்ப்பதற்கான முயற்சியுங் கிடையாது. பள்ளிப் புத்தக வாசகசாலைகளிலுள்ள புத்தகங்களும் பத்திரிகைகளுமே மாயமாகப் பறந்து விடுகின்றன. இப்படியாக, சட்டியிலுள்ளதுதானே அகப்பையில் வரும்; கூட்டுறவு இயக்கத்திற்குப் புதிதாக வந்துசேருகிறவர்கள் அனேகமாக முன்னிலும் மோசமானவர்களாக இருப்பதைப்பற்றி ஆச்சரியப்படுவதற்குமில்லை. ஆகையால், கூட்டுறவு இயக்கத்தை ஆசிரியர்களுள்பட நம் நாட்டினர் அனைவரின் வறுமைப் பிணியையுந் தவிர்க்கும் தீவிரமான முயற்சிகளோடும் இணைக்கவேண்டும். ஒழுக்கத்தையும் திருத்தி நல்லெண்ணத்தையும் வளர்த்து நல் வாழ்வையும் சீக்கிரம் பெருக்கியாகவேண்டும். அப்படியாக எங்கும் தீவிரமாக வேலைசெய்யாமல், இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சமாக வேனும் ஏனோ தானோ வென்றேனும் வேலை செய்வதால் பயனுமிராது; கூட்டுறவியக்கம் அரசாங்க ஆதரவு பெற்றிருக்கும் இயக்கம் என்றெண்ணித் தங்களிருப்புத்தொகைகளை இங்கே கொண்டுவந்து போட்டுவிட்டு வட்டியை வாங்கிச் செலவழித்துக்கொண் டிருப்பவர்களுக்கும், பெருந்தீங்கு விளைந்திடும்.

---

6. கல்வி :

ஆரம்பப் பள்ளிப் பாடத்திட்டக் குறிப்புக்கள்

(சாரம் V)

பெண்களுக்குக் குடும்பாண்மை (Home Science) ஆரம்ப சாத்திரம் (Elementary Science)

ஆரம்பப்பள்ளி மேல் வகுப்புகளுக்கு, குடும்பாண்மைக்கு ஒரு பாடத் திட்டமும் ஆரம்ப சாத்திரத்துக்கு ஒரு பாடத்திட்டமும் வெவ்வேறாக வெளியிடப்பட்டிருக்கின்றன. இரண்டு பாடத்திட்டத்திலும் சில பாகம் ஒன்றாகவும் காணப்படும். பெண்பள்ளிகளில், ஆரம்ப சாத்திரப் பாடத்திட்டத்தில் சில பாகத்தைப் பரீட்சை அதிகாரிகளைக் கலந்துகொண்டு சொல்லி வைக்காதும் நிறுத்திக் கொள்ளலாம்.

அ. ஆரம்ப சாத்திரம் சொல்லிவைக்கும் நோக்கங்களும் முறைகளும்.

ஆரம்ப சாத்திரம் சொல்லி வைப்பதில் நம் வாழ்க்கையை யொட்டியும் நாம் வளர்ந்து வருவதெப்படியென்பதுபற்றியுமே முக்கிய

மாக இருக்கவேண்டும். வாழ்க்கையைப்பற்றிச் சுருங்கிய விவரணங்களோடாரம்பித்து மாணவ மாணவிகளுடைய வளரும் தேவைக்கும் திறத்திற்கும் அக்கறைக்கும் ஏற்றவிதமாகப் போதித்துவரவேண்டும்.

ஆ. ஆரம்ப சாத்திரத்துக்கு வேண்டிய கருவிகள்

மிகவும் எளிய கிராமாந்தரப் பள்ளியும் இவற்றைச் சொற்பத் தொகைக்குள் தயாரித்துக் கொள்ளக்கூடியதாகவே திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு மூன்று கண்ணாடித் தம்ளர்கள், சில சோதனைக் குழாய்கள் (Test-tubes), ஒரு சோதனைக் குழாய் கை பிடி (a holder) சிறு தக்கைகள் (corks), ஒரு சிறு சாராய விளக்கு, ஒரு ஊற்றுப் பேனாமை யூற்றி (a fountain pen ink filler); எளிதாகக் கிடைக்குமென்றால்,ஒரு நீளக்கண்ணாடிக் குழாய்; இந்தக் குழாய் கிடைக்காததென்றால், தானியத்தாளுறிஞ்சி (a lemonade straw); ஒரு உணவுப் படம், இழைத்த மரச் சக்கைகள்; ஒரு தராசு, நிறைப் படிகளுடன்; ஒரு வில் தராசு; வைத்திய வெப்பமானி; அல்லது சுவர் வெப்பமானி; விலை சௌக்கியமான பூதக் கண்ணாடி அல்லது அதிகசத்தியுள்ள வெட்டைச் சோதிக்கும் (dissecting) கண்ணாடி வில்லை (lens); மூன்றரை ரூபாவுக்கு வாங்கக்கூடியது கூடச் சௌக்கியமாகத் தெரியவில்லையென்றால், அட்டைகளால் செய்துகொள்ளக்கூடிய படப் பெட்டி (A Box camera), சில மின்கலங்கள் (Electric cells) சில உறையிட்ட மணிக் கம்பிகள் (Bell-wires), ஒரு மாதிரி மின் ஆக்கப் பொறி (A model dinamo), ஒரு மின் இயக்கி (an electric motor) ஒரு மின் கிளர்சுருள் (An induction coil), ஒரு வெட்டைக் குழாய் (A Vacuum tube); நீராவி எண்ணெய் அல்லது பெட்ரோல் சிறு எந்திரங்கள்; நீராவி எந்திரத்துக்குப் பதிலாக (இரண்டு ரூபாவுக்குள்ளாக விற்கும் விளையாட்டுக் கருவியையும் வைத்துக்கொள்ளலாம்; மற்றவற்றைப் பார்க்கச் சமீபத்திலிருக்கிற அரிசியாலை அல்லது மோட்டார் பிரயாண வண்டி நிலயத்துக்கும் (Bus stand) போகலாம். ஒரு சாரணக் காந்தத் திசை காட்டி (A scout magnetic compass); பல் சக்கரங்கள்போன்ற பழைய சலங்குகள் (Junks), பழைய உருளிவளி வாங்கிகள் (Old cycle pumps) தையல் தார்க்குழல்கள் - இவற்றைப் பையன்களே சேகரித்துக்கொள்ள முடியும். காற்றாலை (wind mill) நீருருளை (water wheel) போன்றவை முன் தொழில் வகுப்புக்களிலேயே செய்துகொள்ளப்படலாம்.

இ. குடும்பாண்மை முறைகளும் நோக்கங்களும்.

பல வேறு வகைப்பட்ட குடும்பாண்மைப் பயிற்சிகளில் பூரணத்தேர்ச்சி ஆரம்பப்பள்ளி காலத்திற்குள் சாதாரணமாகச் சாத்தியமாவதில்லை. என்றாலும், பின் வேலைக்கு அடிப்படையாகக்கூடிய முறையைப் பற்றிச் சில குறிப்புகள் கொடுக்கப்படுகின்றன.

பள்ளி வாழ்க்கையின் முடிவில் ஒரு சாதாரணப் பெண் தன்னுடைய வீட்டுத் தேவைகளை யெல்லாம் திறமையாகச் சேகரித்துக்கொள்ளவும் புதிது புதிதாகச் செய்யக்கூடிய வேலைகளில் (creative work.) ஆர்வம் பெற்றுமிருக்க வேண்டும். இந்த நோக்கத்துடனேயே,சமையல் தையல் வேலைகளுடன் வீட்டு நிருவாகமும் குழந்தைகளைப் பேணலும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

குடும்பாண்மைப்பாடம் ஐந்தாவது வகுப்பில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதில் பயிற்சியும் கொஞ்சம் கொஞ்சமாகவே அதிகமாகிக் கொண்டு போகவேண்டும். எளிதாகச் செய்யக்கூடிய சமையல் தையல் வேலைகளிலிருந்து வீட்டுக்கு வேண்டியனவற்றை யெல்லாம் செய்யத் தெரிந்து கொள்ளவும் வேண்டும்.

ஈ. குடும்பாண்மையின் அனுபவ வேலை.

கிராமப்பள்ளிகளும் நகரப்பள்ளிகளும் சில்லாவுக்குச் சில்லாவும் தங்கள் நிலைமைகளில் பலவேறு வகைப்பட்டிருக்கலாம். ஆகையால், அந்தந்தப் பிரதேசத்தில் வழங்கும் உடை

களையே செய்து கொள்வதென்பதையும் அந்தந்தப் பள்ளியின் முடிவிற்கே விடப்பட்டிருக்கிறது. தையல் வேலையைப்பற்றிப் பாடத்திட்டத்தில் குறிப்பிட்டிருப்பது, ஒரு மாதிரிக்காகவே குறிக்கப்பட்டதாகும். பல வேறு விருத்தித் திசைகளிலும் என்னென்ன வேலைகள் செய்து வரக்கூடுமென்பனவும் குறிக்கப்பட்டிருக்கின்றன. செய்ய எடுத்துக்கொள்ளும் வேலையெதுவும் பெண்களுக்குச் சாதாரணத் தையலில் நன்ருகப் பழகுவதற் குதவ வேண்டும். அலங்காரத் தையல்கள் அனேகத்தில் செய்யக்கூடியதாக இருக்கலாம்; ஆனால், அளவுக்கு மிஞ்சி அதனைச் செய்துகொண் டிருக்கக் கூடாது. பின்னல் பிரியப்பட்டால், கற்கலாம்; பின்னல் வேலையை விரும்பாத பிரதேசங்களில், அதனை விட்டு விடவும் செய்யலாம். கீழ் வகுப்புகளில் செய்யப்படும் வேலைகள் சொற்ப காலத்திற்குள் முடிக்கக்கூடியனவாக இருக்க வேண்டும். எந்த வேலையையும் நல்ல விதமாகச் செய்து முடிக்க வேண்டும்.

மாணவிகள், வர்ணநூலும் மாதிரியும் தெரிந்தெடுக்க, சரியான யோசனைகள் சொல்லி வரவேண்டும். சமையல் வேலை தொடர்ந்துசெய்து படிப்பதற்குச் சௌகரியமாகப் பாட நேரங்களைத்தொடர்ச்சியாக அமைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு சிறு காலத்திலும் (term) செய்துவந்திருக்கும் வேலைகளைப் பற்றி ஒரு தெளிவான குறிப்பு வைத்து வரவேண்டும். (தொடரும்.)

---

7. அ. சுகாதாரம் : குடும்ப வாழ்க்கை.

தூக்கம் வராமை.

(Insomnia or Sleeplessness)

(சுருக்கம்)

நம் முடம்பும் மனதும் தாமாகத்தொழிற்பட்டுவரும் (Involuntary functions) சத்திக்கு ஓய்வு கொடுப்பதே தூக்கமாகும். அது நாம் வெளியுலகில் நடப்பனவற்றை அறியாதிருக்கும் நிலைமையாகவும், நம்முடம்பின் தொழிற்பாடெல்லாம் தளர்ந்திருக்கும் நிலைமையாகவுமிருக்கிறது. நாம் தூங்கும் காலத்தில் தான் களைத்துப்போயிருக்கும் நம் உடம்பும் புத்துயிர் பெறுகிறது; சோர்வுற்றிருக்கும் மனதும் புதுப்பிக்கப்படுகிறது; ஆகையால், அது இயற்கைப் பலவர்த்தனியுமாகும். ஓயாத முயற்சி, நம்முடம்புக்கும் மனதுக்கும் களைப்பையும் அசதியையும் கொடுக்கிறது; தசைகளின் பலத்தையும் குறைக்கிறது; நம் புத்திக்கூர்மையையும் மழுக்கிவிடுகிறது. அப்படி நிலைமையிலும் வேலைசெய்பவனை, அறுக்கவேண்டியபுல்லை அறுக்கமாட்டாதஅறுவாளைக்கொண்டு, அவற்றைச் சும்மாவேனும் ஆட்டிக்கொண்டிருக்கும் சமுசாரிக்கே ஒப்பிடலாம். தீவிரமான முயற்சிக்குப் பின் களைப்புண்டாகிறது. அதற்கு மேலும் வேலைசெய்வதால், அதிக அசதி ஏற்படுமென்றும் அதனால் பெரும் தீங்குகள் விளையக்கூடுமென்றும் அறிவிக்கும் எச்சரிக்கையாகவே அந்தக் களைப்புண்டாகிறது. ஆதலால், அந்தக் களைப்பை மாற்றிக்கொள்ளத் தூக்கமும் அவசியமாகிறது. இப்படியாகத் தூக்கத்தின் அருமை நமக்குத் தெளிவாகத் தெரிந்தேயிருக்கிறது. பட்டினியாக 15 முதல் 20 நாட்கள் உயிரோடிருக்கும் சிறு நாய்களும் தூக்கமில்லாதபொழுது ஐந்து நாட்களிலும் இறந்துபோகின்றன. இதுவே, நமக்கும் ஓரளவிற்குப் பொருந்தும்.

வயதுக்குத் தக்கதாகத் தூங்கவேண்டியிருக்கிறது. வயது வந்தவர்களைக் காட்டிலும் குழந்தைகள் அதிகமாகத் தூங்கவேண்டும். புதிதாகப் பிறந்த குழந்தை பால் குடிக்

கிற நேரம் தவிர்த்து மற்ற நேரமெல்லாம் தூங்குகிறது. ஒரு வயதுக் குழந்தை சுமார் 18 மணி நேரம் தூங்குகிறது. 6 வயதுக் குழந்தை சுமார் 12 மணி நேரம் தூங்குகிறது. 15 வயதானபிறகு 9 முதல் 10 மணி நேரம் தூங்குகிறது. அதற்கு மேல் வயது வந்தவர்கள் ஏழெட்டு மணி நேரம் தூங்கவேண்டும். இப்படியாக, வயதாக ஆக அவசியம் தூங்க வேண்டிய நேரமும் குறையும்; ஆகையால், தூக்கத்துக்கும் ஓரளவுண்டென்று அறிய வேண்டும். நாம் அதிகமாகத் தூங்குவதாலும் சுகமடைவதில்லை. பொதுவாக, அதிகமாகத் தூங்குவது அபூர்வம்; தூக்கம் வராமலிருப்பது சாதாரணம்; அதற்குக் காரணங்கள் உடம்பைப்பற்றியதாகவு மிருக்கலாம்; மனதைப் பற்றியதாகவு மிருக்கலாம். உடம்பின் பல பாகங்களிலுள்ள வலியாலும், காய்ச்சலாலும் குருதியமுக்கத்தாலும் (Blood Pressure) புரிசைச் சுரப்பி (Thyroid gland) யில் சுரப்பு அதிகமாவதாலும் தூக்கத்திற்குக் கேடு வரலாம். மூளைக் கோளாறும், கிளர்ச்சியும், பயமும், தொல்லையும் தூக்கத்தைக் கெடுக்கும் மனத்தையொட்டிய காரணங்களாகும்.

தூக்கம் வராமை ஒரு பிணியல்ல. அது ஒரு குறியே யாகும். அதற்கு மாற்றும் அதன் காரணமறிந்து அந்தக் காரணத்தை மாற்றுவதேயாகும்.

தூக்கம் வராமையை நீக்குவது அவ்வளவு சிரமமானதுமல்ல. தூக்கம் வராமைக் காரணங்களை மாற்றுவதற்குப் பண்டிதருடைய யோசனையும் வேண்டியதிருக்கலாம். உடம்பைக்கொண்டு உழைப்பதேயில்லையென்றாலும் தூக்கம் வருவது சிரமப்படும்; ஆகையால், நித்தம் படுக்கப்போகுமுன் 15 அல்லது 20 நிமிடம் உலாவுவது நல்லது. அப்படி உலாவ முடியாது போனாலும் மேலைக் காலைப்பிடித்து விடவாவது (message) வேண்டும். படுக்கையின்மேல் பல போர்வைகளையும் அடுக்குவதுங்கூடாது. கலங்கிய தூக்கத்திற்கும் கனுக் காண்பதற்கும் அதுவே காரணமாகலாம். தூங்கும் அறையில் நல்ல காற்றோட்டம் வேண்டும். தூங்குவதற்கு 4 மணி நேரத்திற்கு முன்னதாக உணவு கொண்டிட வேண்டும். அப்படி உண்பதிலும் அதிகமாக உண்ணக்கூடாது. தூங்கப் போகுமுன் வெந்நீரில் குளிப்பதும் அநேகமாக நல்ல தூக்கம் வரச் செய்யும். நம்முடம்பு மற்றவற்றோடு சரிக்கட்டிக்கொள்ளுவதுபோலவே இரைச்சலையும் பொருட்படுத்துவதில்லை. ஓயாது புகைவண்டித் தொடர்கள் போய்க்கொண்டிருக்கும் பாதைப் பக்கமாகத் தூங்குகிறவர்கள் அந்த இரைச்சலாலும் விழிப்பதில்லை. (ஆனால், புகைவண்டியில் தூங்கிக்கொண்டே போகிறவர்கள் வண்டி நிற்கவும் விழித்து விடுவார்கள். ப-ர்)

நல்ல தூக்கம் பெறுவதற்கு முக்கியமாக மனம்தான் நல்ல நிலைமையிலிருக்கவேண்டும். அது அமைதியாக இருக்கவேண்டும். படுக்கப்போகுமுன் கிளர்ச்சியான சமாசாரங்களைக்கேட்கவும் படாது. மனதை உறுத்தும் கதைகளையும் படிக்கக்கூடாது. சிலருக்கு இலேசாகப் படிக்க ஆரம்பித்தாலும், தூக்கம் வந்துவிடும்; ஆழ்ந்த மூச்செடுப்பதாலும், தூக்கம் வந்திடக்கூடும்.

Health

(வேறு காரணமாகத்தூக்கம் வராமலிருப்பதை வெறுங் குறியாகக் கொள்ளலாம்; மூளைக் கோளாறுகப் பல நாள் தொடர்ந்து வராமலிருப்பதைப் பிணியாகவன்றி வெறுங் குறியாகக் கொள்வதற்கில்லை. இதற்குமாறான ஓயாத தூக்கமும் (Sleeping Sickness) நீங்காத தூக்கச் சடைவும் (Sleepy Sickness) இதனைப் போலவே மூளைக் கோளாறுகளாகும். தூக்கம் வராமைப் பிணி குணமாகவுங்கூடும்; மற்றவை யிரண்டும், வெகு நாள் சிகிச்சையாலும், குணமாகச் சிரமப்படும். ப-ர்.)

ஆ. நாட்டுவைத்தியம் மிருகவாகடம் பாகமுறை

சுகாதார வாழ்க்கைக் குறிப்புக்கள்

I. வெண்கீரைத் தண்டு.

1. வெண்கீரைத் தண்டு வியாதியற்ற நற்கறியாங்
கண்காணு தோடிவிடுங் காந்தலெல்லாங் -கண்ண
மூலம்அதற் கேற்கும் முசியா எரிவகற்றுந்[காணும்
நாலமதில் அக்குணத்தைச் சாற்று.

அகத்தியர் குணவாகடம்.

இதனைச் சமையல் செய்துண்டுவர, காந்தல் மூலம் பித்த எரிச்சல் குணமாகும்.

2. செங்கீரைத்தண்டு.

செங்கீரைத் தண்டதுதான் தீராத பித்தத்தைத்
தங்காமல் ஓட்டிவிடுந் தையலர்க்குப்-பொங்கும்
பெரும்பாட்டை நீக்கும் பெரிய கறியாந்
தரும்பாட்டு வெப்பகற்றுந் தான்.

அகத்தியர் குணவாகடம்.

இதனைச் சமையல் செய்துண்டுவரத் தீராத பித்தமும் பெண்களின் பெரும்பாடும் வெப்புங் குணமாகும்.

II. கீரைத்தண்டில் 92·5 சதம் ஈரிப்பும் ·9 சத பிசிதமும் (Protein) ·1சதம் கொழுப்பும் 1·8 சதம் கனியமும் 1·2 சதம் நாரும் 3·5 சதம் கரிநீரகையு (carbohydrate) மிருக்கின்றன. கனியப்பொருள்களில் ·26 சதம் சுதையமும் (calcium) ·3 எரியமும் (Phosphorus) இரும்பு கிழாயிரச் சிரெடை 1·8 சதமும் இருக்கின்றன. 100 சிரெடைக்கு 19 கனலிச்சூடுமுண்டாகும்.

Health Bulletin No. 23.

III. 1. வாயுபத்திரவத்தால் உண்டாகும் தூக்கமின்மையைத் தவிர்ப்பதற்கு ஒரு சிறந்த முறை, படுக்கப்போகுமுன் ஒரு தமிளர் வெந்நீர் குடிப்பதேயாகும். இது உடனே வாயுவைக் கலைத்துவிடும். பெப்பர்மிண்ட் எசன்ஸ் (Pepperment essence) அல்லது அரோமாட்டிக் ஸ்பிரிட்ஸ் ஆவ் அம்மோனியோ என்பதில் சில சொட்டுக்கள் (Aromatic-spirits of Ammonia) ஊற்றிக்குடிப்பது பின்னும் நல்லது. இதைப் படுப்பதற்குச் சுமார் அரைமணி நேரத்துக்குமுன் குடிக்கவேண்டும். படுப்பதற்கு முந்தி உடுப்பைக் கழற்றுவதால் ஏற்படும் உடல் அசைவுகள் வாயுவை இரைப்பையினின்று ஏப்பத்தின்மூலமாகவோ அல்லது சிறுகுடலுக்குள்ளோ தள்ளிவிட உதவுகின்றன. சிறு குடலுக்குள் போன வாயு அங்கே பித்தத்தைச் சந்திக்கும். பித்தம் ஒரு நச்சுநீக்கி (Antiseptic); ஆதலால், அது சிறுகுடலில் புளிப்புக்கொள்ளாதபடி தடுத்துவிடும்.

இராத்திரி இரண்டு மூன்று மணிக்குத் தூக்கம் கலைந்து எழும்புவதற்குக் காரணம், அளவுக்கு மிஞ்சிச் சாப்பிட்டதாக இருக்கலாம்; அல்லது இராச்சாப்பாட்டிலே அளவுக்கு மிஞ்சி மாக்கூர் (Starch) அல்லது கொழுப்பு இருந்திருக்கலாம். கல்லீரல் தன்னுடைய வேலையை மும்முரமாகச் செய்வதற்குச் சாப்பாட்டிற்குப் பிறகு ஏழெட்டு மணி நேரமாகும். ஆகையால், இராத்திரி இரண்டு அல்லது மூன்று மணிக்கு எழும்புவதைத் தவிர்க்க விரும்புகிறவர்கள், இராத்திரி குறைந்த அளவே சாப்பிட வேண்டும்; அல்லது இராச்சாப்பாட்டில் மாக்கூர்ப் பொருள்களும் கொழுப்பும் மிகக்குறைவாக இருக்கவேண்டும். (தயிர் இரவில் சேர்க்கக் கூடாதென்பதற்குக் காரணம் அஃதொரு கொழுப்புப் பொருளாக இருப்பதாகும். ப—ர்)

சிலருக்கு வெறும் வயிற்றோடு படுக்கப் போனால்தூக்கமேவராது. இராச்சாப்பாட்டுக்கு நாலைந்து மணி நேரத்துக்குப் பிறகே படுக்கப் போவதாக இருந்தால், படுக்குமுன் ஏதாவதொரு நல்ல பானம் சாப்பிடலாம். இதற்குப் பால் நல்லது.

நல்வழி.

2. தினசரி காலையில் பல்துலக்குவது போலவே கண்ணையும் குளிப்பாட்டுவது அத்

தியாவசியம் என்று உபாத்தியார்கள் மாண வர்களுக்குச் சொல்லிவைக்க வேண்டும்.

நல்வழி.

(இரவிலும் பல் துலக்கியும் கண்ணைக் குளிப்பாட்டியுமே தூங்கவேண்டும். தூங்கி யெழுந்தவுடனும் முதல் வேலை இவையாக இருக்க வேண்டும். பல் துலக்குவது ஒரு நாளைக்கு ஒரு வேளைதான் சாத்தியப்படுமென் றால், அது படுக்கப்போகு முன்னதாக இருக்க வேண்டும். கிணறு குளங்களிலுள்ள சுத்த மான தண்ணீரில் கொஞ்ச நேரம் கண்ணை அமிழ்த்தித் திறந்து பார்க்கலாம்; வீடுகளில் வாயகன்ற பாத்திரத்திலுள்ள (Basin) தண் ணீரிலும் இப்படிச் செய்யலாம். இதைத்தான் கண்ணைக் குளிப்பாட்டுவது (Eye-bath) என்று சொல்லுவது. ப-ர்.)

IV. பசுக்களை, காளைமாடுகளை ஈக்கள் மொய்த்துக் கடிப்பது சில சமையம் சகிக்க முடிவதில்லை. இப்படிப் பல நாட்கள் மாதங்கள் தொடர்ந்தும் கடித்துவரக் காணலாம். ஈக் கடியால் முக்கியமாக நரம்புகள் தளர்ச்சியடை கின்றன. காளைமாடுகளும் பலங்குன்றிப் போ கின்றன. கறவைப்பசுக்களிலும் பால் குறைந்து போகிறது. பசுக்களில் பால் குறைந்து போ வதைப் பரிட்சித்துப் பார்த்திருக்கின்றனர். ஈக் கடிக்கு மருந்து தெளிக்கப்பட்டு வந்த ஐந்து பசுக்கள் நித்தம் சராசரி 1·6 இராத்தல் அதிக மாகக் கறந்தன. அப்படித் தெளிக்கப்படாத நான்கு பசுக்கள் முன்போலவே கறந்துவந்தன.

டைசல் நெய் (Diesel oil) ·92 பாகம். தேவதாரு நெய் (Pine oil) 3 பாகம். ஆகச் சேர்த்து நித்தம் இரண்டு அவுணமாக இருபத் தொரு நாள் தொடர்ந்து ஐந்து பசுக்களுக்கு (Flit Sprayer) தெளித்து வரப்பட்டது. அதன் பின் சவர்க்காரம்போட்டு அவை குளிப் பாட்டப்பட்டன; இதனால், ஈக்கடியும் அறவே நின்றுபோயிற்று; தோலுக்கும் ஒரு வித ஊனமில்லை.

Indian Farming.

V. தாமரையின் விதைகளைக் காய வைத்து அரைத்து மாவாக்கிச் சப்பாத்தி அல் லது உரொட்டி செய்யலாம். அவற்றில் ஏ,[1] பி,[1] பி,[2] ஆகிய உயிர்ச்சத்துக்கள் இருக் கின்றன. இதனால் அவை வளர்ச்சி நீடித்த வாழ்க்கை தொத்து நோய்கள் வராதபடி பாது காப்பு நரம்புகளுக்குப் போதிய ஊக்கம் பசி சீரணம் பொதுவாக நல்ல சுகம் முதலியவற் றைக் கொடுக்கும். தாமரையின் மொட்டுக் களைக் கறியாகச் சமைக்கலாம். வங்காளத்தி லும் திருவாங்கூரிலும் சிற்சில இடங்களில் தாமரைத் தடாகங்களைச் சுற்றி நன்றாக வேலி யடைத்து, அவற்றில் தேனீக்களை வளர்க்கிறார் கள்; இப்படி எடுக்கப்படுந் தேன் அருமையா னது. சிலர் தாமரைப் பூவை அரைத்து சந்தனத்துடன் கலந்து சொறி சிரங்குக்குப் பூசுகிறார்கள்.

நல்வழி.

பயிரிடுபவரின் வறுமை

CHOWDHRY MUKHTAR SINGH

(சாரம் VII)

பழைய காலம்

'உழவுக்கு மிஞ்சிய தொழிலொன்று மில்லை; அதற்கடுத்தது வாணிபந்தான்; சேவ கம் பிச்சை யெடுப்பதற்கும் கொஞ்சம்தான் உயர்ந்த படியாகும்.' என்று இந்தியில் ஒரு பழமொழி யுண்டு. தற்காலத்திலோ, உழவு வெகு கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டது. சிறு வியாபாரி சில்லறை வியாபாரிக்குங்கூட, உழவர் (பயிரிடுபவர்)களின் நிலைமை கேவல மாக இருக்கிறது. உழவர்களை வைத்த வியா பாரியின் நிலைமையும் நன்றாக இருக்க, உபவர் கனன் நிலைமை கேவலமாக இருக்கிறதென்றால்,

நாமென்ன சொல்லுவது? உழவர்கள் கொடுக்கும் வரிப் பணத்தைச் சம்பளமாக வாங்கிப் பிழைக்கும் பெரிய அதிகாரிகளுக்கு உழவர்கள் கேவலமாகத் தோன்றுவது பெரிதல்ல. மாதம் 15 ரூபாவே சம்பளம் பெறும் எழுத்து வேலைக்காரனும், நித்தம் ஒரு ரூபா சம்பாத்தியம் செய்யும் கூலி வேலைக்காரனைவிடத் தன்னைப் பெரியவனாக நினைக்கிறான். முக்கியமாக, உழவர்களின் நிலவரி முதலியவற்றை வைத்துத்தான், அரசாங்க வேலைக்காரர்களுக்குச் சம்பளம் போடப்படுகிறது. என்றாலும், 10 ரூபா சம்பளம் வாங்கும் ஒரு சேவகனுக்கிருக்கிற மரியாதையுங்கூட, ஓர் உழவருக்கு இருப்பதில்லை. சில பிச்சைக்காரர்களுக்குக் கிடைக்கும் வரும்படியுங்கூட மழையிலும் நனைந்து வெய்யிலிலும் காய்ந்து காற்றிலும் அடிபட்டுவரும் உழவருக்கிருப்பதில்லை.

உண்மையாகவும் கடுமையாகவும் உழைக்கும் உழவரின் நிலைமை கேவலமாக இருக்கிறதென்றால், அஃது அப்படி உழவராலேயே முக்கியமாகத் தாங்கப்படும் அரசாங்கத்திற்கும் கேவலந்தான். தன்னைக் காப்பாற்றிவருகிற உழவர் செத்துப் போகாமல் உயிரோடேனும் இருந்து வரும்படியாக, அந்த அரசாங்கம் பாதுகாக்கவேண்டியது அதன் கடமையாகாதா? நம் இந்திய மக்களில் பெரும்பாலார் ஐம்பது வயதுவரைக்குங்கூட வாழ்வதற்கில்லாமல் இறந்து போகிறார்கள். பிரிட்டனில் சராசரி மரண வயது முன்னிலும் இரட்டித்து வர, நம் நாட்டினரின் வயது குறைந்தும் வருகிறது. (சில வருடங்களுக்கு முன்னிருந்ததற்கு இப்பொழுது கொஞ்சங்கூடியே யிருக்கிறது. ப-ர்)

சாதாரணமாகப் பொருளாதார நிபுணர்கள் கிராமாந்தர வறுமைக்கு உழவரே காரணமென்று சொல்லி வந்திருக்கிறார்கள். நம் கருத்து அதற்கு மாறாக இருக்கிறது. பழைய கட்சியை அடித்துப் புதிய கட்சியை நிலை நாட்டுவது வெகு சிரமமான காரியம். என்றாலும், உண்மை அதுவாக இருப்பதால், அதனை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். உழவரைப்பற்றி அக்கறை கொண்டிருப்பவர்கள் அபூர்வமென்றால், அதற்காக நாமும் பின் வாங்குவதாக இல்லை.

பழைய கிராமங்கள்

பழைய கிராமங்கள் தம் தம் அளவிலேயே நிறைந்திருந்தன. இப்பொழுது அவை தனித்திருக்கக்கூடியனவாக இல்லை. முன்காலம் கிராமத்திலுள்ள நிலங்களெல்லாம் கிராமத்துக்குப் பொதுவாகப் பாத்தியப்பட்டிருந்தன. அவற்றின் எதொரு பாகமும் எவருக்கும் தனியாகப் பாத்தியப்பட்டிருந்ததில்லை. மேய்ச்சலுக்காகவும் தாராளமாக, நிலங்கள் பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. அதிகப் பால் கொடுக்கும் பசுக்களும் ஏராளமாக இருந்தன. களஞ்சியங்கள் எப்பொழுதும் நிறைந்திருந்தன. நிலங்கள் நன்றாக விளைந்தன. அவற்றை மூன்று வருடத்திற்கொரு தடவை சாகுபடி செய்தாலும் விளைவு போதுமானதாக இருந்தது. கோவிலுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் கிராம வேலைக்காரர்களுக்கும் விடப்பட்டிருந்த நிலங்களுக்குத் தீர்வையும் வசூலிப்பதில்லை. கிராமங்களுக்கு வேண்டிய தேவையெதுவும் அந்தக் காலத்தில் அனேகமாக அந்தக் கிராமத்திலேயே கிடைத்துவிடக்கூடும்; காணாததை, அடுத்த ஊர்ச் சந்தையிலேயே வாங்கிக் கொள்ளுவார்கள். ஒவ்வொருவரும் பிறரோடு அன்னியோன்னியமாய் வாழ்ந்து வந்தார்கள். இப்படியாக, ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவும் வெகுவாக இருந்து வந்தன.

(தொடரும்)

வெண்பா.

மழையின்றி மானிலத்தார்க் கில்லை; மழையும்
தவமிலார் இல்வழி இல்லை—தவமும்
அரசிலார் இல்வழி இல்லை; அரசும்
"உழவ ரிலாவழி" இல்.

9. கதை : சரித்திரம் :

காலம் சென்ற குரு சதேதத்தரும் விரதச்சாரி இயக்கமும்.

I

குரு சதேதத்தர் 1882-ம் வருடத்தில் சில்கத் சில்லாவில் பிராசுரி கிராமத்தில் பிறந்தார். அவர் நம் நாட்டுப் பள்ளியிலும் கல்லூரியிலும் படித்துத் தேறிய பிறகு, சீமைக்குப் போய் 1904-ம் வருடத்தில் ஐ. சி. எஸ் பரிட்சையும் தேறினார். அதன் பிறகு, கேம்பிரிச்சுப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எம்மேனுயல் கல்லூரியில் ஒரு வருடம் வரை படித்து 1905-ம் வருட முடிவில் இந்தியன் சிவில் சர்விசு உறுப்பினராக நம் நாட்டிற்கு வந்து சேர்ந்தார்.

அவர் கௌரா சில்லா குற்ற விசாரணையதிகாரியாக (District Magistrate) இருந்த பொழுதுதான், பாமன் கச்சிச் சுடுவழக்கில் (Shooting case,) வெள்ளைக்காரச் சில்லா போலீசு சூப்பிரண்டெண்டையும் பட்டாள அதிகாரியையும் அவர்களுடைய நடத்தையைக் கண்டித்துத் தீர்ப்பெழுதினார். ஸ்டேட்சுமென் பத்திரிகை அவரைத் தாக்கி நான்கு தலையங்கங்கள் எழுதிற்று. பிற்கென்கெட் பிரபு பாராளுமன்றத்தில் சரமாரியான கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியதுமாயிற்று. அதன் மேல் ஒரு தனி விசாரணையும் நடந்தது.

1929ம் வருடத்தில் ஐரோப்பாவில் நீண்ட காலம் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தார். உரோமா புரியிலுள்ள சர்வதேச விவசாயச் சங்க மகாசபைக் கூட்டத்திற்கும் நம்மிந்திய அரசாங்கப் பிரதிநிதிகளுக்குத் தலைவராகச் சென்றிருந்தார். அதே வருடம் கேம்பிரிச்சில் நடந்த உலக முதியோர் கல்விமாநாட்டிற்கும் ஒரிந்தியப் பிரதிநிதியாகப் போயிருந்தார்.

1929ம் வருடக் கடைசியில் மைமென்சிங் கலக்டராக வந்து, கிராமச் சீரமைப்பியக்கத்தையும் ஆரம்பித்தார். இந்த இயக்கத்தில் எவர் மனதையும் கவர்ந்து வந்த ஒரு முக்கியமான காரியம், அதில் உழைப்புக் கொடுத்த ஒரு புதுமாதிரிப் பெருமையேயாகும். அவர் தாமே தம் கையில் ஒரு கோடரியைப் பிடித்துக் கொண்டு, பல இளைஞரையும் முதியோரையும் ஒரு படையாகத் திரட்டி, சுகாதாரம் குறைவாக இருந்த காடுகளிலுள்ள மரங்களையெல்லாம் வெட்டிக் கீழே தள்ளி வந்ததும் அதே மாதிரிப் படை சேர்த்து மண் வெட்டியுடன் போய்த் தூர்ந்து போன வாய்க்கால்களையெல்லாம் பிறருடன் தாமும் தோண்டி அவற்றைப் பயன் படச் செய்ததுமாகும். (இப்படிக் கலக்டரை நாம் எங்கே பார்க்கப் போகிறோம்? ப-ர்.) இங்கே கலக்டராக இருந்த பொழுதுதான், உப்புச் சத்தியாக்கிரகம் செய்யக் காந்தியடிகள் தண்டிக்குப் போன தினத்தன்று, ஒரு கூட்டத்தைச் சுடுவதற்கு அனுமதி போலீசுக்காரர்கள் கேட்டதைக் கொடுக்க மறுத்ததனால், அவர்கள் கோபத்திற்கும் ஆளானார். அதன் பயனாக, இங்கிருந்து தந்தி மூலமாக அவருடைய வேலையினின்றும் மாற்றப் பட்டார்.

1931ம் வருடம் வங்காள கிராமாந்தரப் பாதுகாப்புச் சங்கத்தின் பெயரால் ஒரு புதிய இயக்கத்தைத் துவக்கினார். அதனுடைய முக்கிய நோக்கம் வங்காளத்திலுள்ள கிராமாந்தர அருங்கலைகளையும், கிராம இலக்கியம் கிராமப் பாட்டுகள் நடனங்கள் இவற்றையும் புதுப்பிப்பதும் பாதுகாப்பதுமாகும்.

குரு சதேதத்தர் வங்காளி மொழியில் புத்தகங்க ளெழுதுவதிலும் சிறந்தவரெனப் பெயர்பெற் றிருக்கிறார். குழந்தைகளுக்கேற்ற பாட்டுகளடங்கிய அனேக புத்தகங்களெழுதியிருக்கிறார். கிராமப் புனருத்தாரணம் சம்பந்

தமாகவும் தேசியம் கல்வி பற்றியும் அனேக பாட்டுகள் பாடி யிருக்கிறார். இவையெல்லாம் சனங்களால் பெரிதும் போற்றிவரப் படுகின்றன. இவை தவிர்த்து வங்காளத்தில் கிராமப் புனருத்தாரணம் சம்பந்தமான வேலைகள் செய்வதில் சிறந்தவராகவும் நல்ல யோசனை சொல்லக் கூடியவராகவும் கருதப்பட்டு வந்தார். கிராமச் சீரமைப்பைப் பற்றிய அவர் புத்தகம் (Village Reorganisation) எவரும் பின்பற்றத் தக்கதாகக் கொள்ளப் படுகிறது. அவர், தம்முடைய இறந்து போன மனைவியார் பெயரால் கல்கத்தாவில் ஏற்படுத்தி யிருக்கும் சரோசி நளிதனிதத்தர் ஞாபகார்த்த சங்கத்தின் தாபகரும் உயிரும் ஆவார். அந்தச் சங்கமே நம் நாட்டிலுள்ள சங்கங்களிலெல்லாம் பெரியதாகவும் மற்றும் மாகாணங்களிலும் பல கிளைகளுடையதாகவும் வங்காளத்திலும் சுமார் 400 கிளைகளுடையதாகவு மிருக்கிறது. அந்தச் சங்கம், பல ஆக்கவேலைகளின் மூலமாக, நம்மிந்தியப் பெண்களின் பூரணவிடுதலைக்காகவும் கல்விக்காகவும் வேலை செய்து வருகிறது.

மற்றும் பல புத்தகங்களெழுதி யிருப்பதுடன், இறந்துபோன அவர் மனைவியைப் பற்றியும் வங்காளி மொழியில் சிறந்த நூலொன்றெழுதி யிருக்கிறார். அந்த நூல் வங்காளத்தில் வீடு தவறாமல் நடமாடி வருகிறது. அஃது, அவருடைய மனைவியின் குறிக்கோளை வங்காளப் பெண்களின் குறிக்கோளாகவும் செய்திருக்கிறது. ஒரு இந்தியப் பெண்ணென்று (An Indian woman) தலைப்புக் கொடுத்து அங்கிலத்திலும் ஒரு நூலெழுதி யிருக்கிறார். அது சீமையிலும் மற்றும் அங்கிலம் பேசும் நாடுகளெல்லாவற்றிலும் வெகுவாகப் பரவி யிருக்கிறது.

விரதச்சாரி இயக்கத்தை இப்போதிருக்கிறபடி 1932ம் வருடத்தில் ஆரம்பித்தார். இந்த ஒப்பற்றமுறை ஏக காலத்தில் உடம்பையும் மனதையும் ஆன்மாவையும் கட்டுப்பாடான வாழ்க்கைக்கு ஈடுபடச்செய்து, குடிமையின் குறிக்கோளையும் (Citizenship) அனுபவத்திற்குச் சாத்தியமானதாக வங்காளத்திலும் பிற மாகாணங்களிலும் பரவச் செய்திருக்கிறது.

அவர் இலண்டன் மா நகரத்தில் கூடிய சர்வதேச கிராமாந்தர நடன விழாவிற்குக் கல்கத்தா பல்கலைக் கழகத்தின் பிரதிநிதியாகப் போயிருந்தார். அங்கேயும் ஒரு விரதச்சாரிச் சங்கம் அமைக்கப்பட்டது. அதில் கார்மைக்கேல் சீமாட்டியும் சர் மைக்கேல் சேட்லரும் சர் பிரான்சிஸ் யங்கஸ்பண்டும் அங்கத்தினராகச் சேர்ந்தார்கள். அவர் தென் மார்க்கிலும் பிரான்சிலும் வெகுவாகச் சுற்றிவந்தார். எவரையும் கவர்ச்சிசெய்யும் அவருடைய இணையற்ற இயக்கமும் பெருந்தன்மையும் மிகுந்த ஆரவாரத்தைக் கிளப்பிவந்தன.

அவர் நம் நாடு திரும்பிவந்தபொழுது, பண்டிதர் முக்கர்சியின் தலைமையின் கீழ், பல்கலைக் கழகச் சங்கத்தின் ஆதரவில், நம் நாட்டார் பெருந் திரளாகக்கூடி, அவரை வெகு ஆவேசத்துடன் வரவேற்றனர்.

சமீபத்தில் விரதச்சாரி இயக்கம் தென்னிந்தியாவிலும் பரவியிருக்கிறது. படித்த வாலிபர்கள் பலர், அவரியக்கத்தில் ஈடுபட்டவர்களாக அங்கிருந்து வந்து வங்காள விரதச்சாரி பயிற்சி வகுப்பிலும் சேர்ந்து ஏராளமாகப் படித்துச் சென்றனர். சென்ற வருடத்தில் அவர் சென்னைக்கும் மைசூருக்கும் சில விரதச்சாரிகளைக் கூட்டிக்கொண்டு போயிருந்தார். பயிற்சி பெறுகிறவர்களின் எண்ணிக்கை வெகு வேகமாக விருத்தியாகாதிருப்பதைப் பொறுதவர்களாக, இந்த வருடத்தில் தென்னிந்திய விரதச்சாரி சங்கத்தைச் சென்னையில் தாபித்து அதனாதரவில் பூவிருந்தமல்லியில் ஏராளமான ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் வங்காளத்திலிருந்து வந்த விரதச்சாரிகளின் உதவிகொண்டு பயிற்சி கொடுத்து முடித்திருக்கின்றனர். அவர்களுடைய பயிற்சியின் முடிவில் தென்னிந்திய பத்திராதிபர்களும் பொது வாழ்க்கைத் தலைவர்களும் பயிற்சிபெற்றிருப்பவர்

களின் வேலைத்திறமையை வெகுவாகப் புகழ்ந்தும் பேசியிருக்கிறார்கள். இந்தப் பயிற்சி பெற்றிருப்பவர்களில் அனேகர் ஆசிரியர்கள். அவர்கள் நாட்டின் பல பக்கங்களுக்கும் போய் ஆங்காங்கே பயிற்சி வகுப்புகளை யேற்படுத்தி வருகின்றனர். நம் நாடெங்கும் ஒற்றுமையை வளர்த்து வருவதற்காக அகில இந்திய விரதச்சாரி சங்கமொன்றும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

இந்த வருடத் துவக்கத்தில் கல்கத்தாவிலிருந்து வைரத்துறைமுகம் (Diamond harbour) போகும் சாலையில் எட்டாவது மைலில் சோகா (Joka) என்ற கிராமத்தில் விரதச்சாரி பயிற்சித் தாபன மொன்று (Brathachari Janasiksha pratistan) ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இதனைக் கிராமவாசிகளின் விரதச்சாரி பல்கலைக் கழகத்தின் ஆரம்ப மென்று சொல்லலாம். இந்தத் திட்டத்திற்காக ஏராளமான பணம் வங்காள அரசாங்கமும் அனுமதித்திருக்கிறது.

(தன் மனைவியாரை யிழந்த வருத்தத்தையும் பொருட்படுத்தாது, அவர் பெயராலும் விரதச்சாரிச் சங்கத்தின் பெயராலும் தீவிரமான வேலை செய்ய விரும்பி, பின்னும் சில காலம் சர்க்கார் வேலை பார்க்கக்கூடியதையும் விட்டு ஓய்வெடுத்து நாடெங்கும் சுற்றி வேலை செய்து வந்தவர், சில மாதங்களுக்குமுன் திடீரென இறந்துபோனது, நம் துரதிட்டமென்றே சொல்லவேண்டும். இந்தச் சரித்திரம் விரதச்சாரி தலைமைச் சங்கக் கட்டுரையின் மொழிபெயர்ப்பாகும். விரதச்சாரி இயக்கத்தின் அருமைபெருமையைப் பற்றி, அடுத்த இதழில் எழுதுவோம். ப-ர்)

---

10. குடிசைத்தொழில்: கைத்தொழில்

பொருளாதார விருத்திக்கான சௌகரியங்களைப் பற்றிய குறிப்பு

L. B. Green, Director of Industries and Commerce, Madras.

(சாரம் V)

நம் நாட்டில் நெசவு அளவிலும் முக்கியத்திலும் உழவு (பயிர்த்தொழில்)க்கு அடுத்ததாக இருக்கிறது. கிராமாந்தரத்தில் உழவுத் தொழிலிலீடுபடாதவர்களுக்கும், பயிரிடும் வேலைகளில்லாத காலத்தில் உழவர்களுக்கும் நெசவுபோன்று வரவு தரத்தக்க வேறு தொழிலொன்றுமில்லை. கைத்தறி நெசவுகாரர்களுக்குப்போதிய பாதுகாப்புத் தருவதற்குத் தடையாகப் பல சங்கடங்களிருக்கின்றன. குடிசைத் தொழிலாளிகளுக்கு உதவி செய்யவேண்டிய தவசியமென்றாலும், துணி விலை சௌக்கியமாக இருக்கவேண்டுமென்று வாங்குகிறவர்கள் ஆசைப்படுவதற்கும் பாதகமிருக்கப்படாது. நெசவாளிகளுக்கும் நெசவாலைகளுக்குமே போட்டியிருந்து வருகிறது. மேலும் நெசவுகாரர்களுக்குள்ளேயும் வேலையில்லாத் திண்டாட்டம் பரவி வருவதாகப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும் 1920-21ம் வருடத்தோடு முடிந்த பத்து வருடச் சராசரியின்படி ஐந்து கோடியே தொண்ணூறு இலட்சம் இராத்தல் நூல் செலவாகியிருக்க, எழு கோடியே எண்பத்தெட்டு இராத்தல் 1934-35ம் வருடத்திலும் எட்டுக்கோடியே முப்பத்துநான்கு இலட்ச ராத்தல் 1935-36ம் வருடத்திலும் எட்டுக்கோடியே அறுபத்தெட்டு இலட்ச இராத்தல் 1936-37ம் வருடத்திலும் எழு கோடியே ஐம்பத்தேழு இலட்ச இராத்தல் 1937-38ம் வருடத்திலும் செலவாகியிருக்கின்றன. இப்படியாக முன் செலவாகி வந்ததற்கும் அதிகமாகச் செலவாகிவர வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவரக் காரணம் தெரியவில்லை. உழவுத் தொழில் கட்டி-

வராதிருக்கும் நிலைமையில் சிலர் கைத்தறி நெசவிற்கும் வந்திருக்கலாம். 1937-38ல் குறைந்தபடி நெசவாலைப் போட்டியினால் மேலும் குறைந்து வருவதாயிருக்கலாம். இக்காரணத்தால் நெசவாலைப்புள்ளி விபரங்களைக் கைத்தறி நெசவுப்புள்ளி விபரங்களோடு ஒப்பிட்டுப் பார்த்ததில் நெசவாலையில் நெய்யப்படுவதைக் காட்டிலும் கிட்டத்தட்ட நான்கு மடங்கு கைத்தறியால் நெய்யப்பட்டு வருகிறது. கைத்தறி நெசவு பின்னும் எத்தனையோ மடங்கு கூலி வேலைக்காரர்களுக்கு வேலை கொடுத்தும் வருவதாக ஏற்படுகிறது. நம் மாகாணம் சம்பந்தப்பட்டமட்டில் வெளி நாட்டுத் துணிகளின் வரவு குறைந்து வருகிறது. சென்ற சில வருடங்களாக நெசவாலைகளில் இன்னின்ன தரமான துணிகள்தான் நெய்யப்படலாம், கைத்தறிகளில் இன்னின்ன துணிகள்தான் நெய்யப்படலாம் என்று ஒரு வரையறை செய்யப்படவேண்டுமென்று பொதுசன அபிப்பிராயம் இருந்து வருகிறது. அரசாங்கம் இதைப்பற்றிக் கவனித்தும் வருகிறது. என்றாலும் இதனைப்பற்றிச் சட்டம் செய்வதென்றால் மத்திய அரசாங்கமே செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனைச் சுதேச இராச்சியங்களும் அனுசரிக்கத் தயாராக இருக்கவேண்டும். 1937ம் வருடத்தில் நம் மாகாண அரசாங்கம் துணி வியாபாரிகள் அனுமதிச் சீட்டு வாங்கித்தான் வியாபாரம் செய்யவேண்டுமென்று ஒரு சட்டம் செய்தது. மாதம் 5000 ரூபாவுக்குக் குறைவாக வியாபாரம் செய்யும் ஆலைத் துணி வியாபாரிகள் வருடத்திற்கு 2 ரூபா செலுத்தவேண்டுமென்றும் மற்றவர்கள் 5 ரூபா செலுத்தவேண்டுமென்றும் ஏற்படுத்தியது. இந்த அனுமதிச் சீட்டு வரியை உயர்த்துவதனாலும் கைத்தறி நெசவிற்குப் பாதுகாப்பு ஏற்படலாம்.

1934-ம் வருடத்தில் நம் இந்திய அரசாங்கம் கைத்தறி நெசவை விருத்திசெய்வதற்காகக் கைத்தறி நெசவுகாரர்கள் கூட்டுறவாக வாங்கவும் விற்கவும் சென்னைக் கைத்தொழிலிலாகா செய்திருந்த திட்டத்திற்கு உதவிசெய்ய முன் வந்தது. மத்திய அரசாங்கமும் அங்கீகரித்த அந்தத் திட்டத்தின்படி மத்திய நெசவுக்காரர் கூட்டுறவுச் சங்கமொன்று சென்னையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனோடு சில்லாக்களில் ஏற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இணைக்கப்படலாம். மத்திய சங்கம், சில்லாக்களிலிருக்கும் கூட்டுறவுச்சங்கங்களுக்கு நூல்சாயம் இரசாயனப்பொருள்கள் திருத்திய கருவிகள் புது ரகங்கள் உதவவும் விலையாகாதிருக்கும் துணிகளை விற்றுத்தரவும் கூடும். அது 5 இலட்ச ரூபா பங்குத்தொகையுடன் அதாவது பங்கொன்று 50 ரூபாவாகப் பதினாயிரம் பங்குகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதனோடிணைக்கப்பட்டிருக்கும் சங்கங்களுக்கு உதவியாக விற்பனைச்சாலைகள் பொருட்காட்சிச்சாலைகள் அமைத்திருக்கின்றன. பாவாற்றுவதற்கும் முடிந்தசரக்கைப் பாடம்செய்வதற்கும் நவீன கருவிகளும் உதவி வருகிறது. சென்னையில் ஒரு பொருட்காட்சிச்சாலையும் பெசுவாடா பெல்லாரி கள்ளிக்கோட்டை வேலூர் மதுரை திருநெல்வேலி கோயம்புத்தூர் இந்த இடங்களில் விற்பனைச் சாலைகளும் ஏற்படுத்தியிருக்கின்றன. 1939 மார்ச்சு முடிவில் 131சங்கங்கள் இணைக்கப்பட்டிருந்தன. அதற்குப்பின் 40புதுச் சங்கங்களுக்கும் உதவி செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சங்கங்களின் வேலைக்காரர்களுடைய சம்பளத்துக்கும் புதுக்கருவிகள் வாங்குவதற்குமாக 25817 ரூபா கொடுக்கப்பட்டிருக்கிறது. மாகாணச் சங்கப் பொறுப்பின் பேரில் நூல் வாங்குவதற்காக ரொக்கக் கடன்களும் (Cash credit loans) விற்பனைக்கு அனுப்பப்படும் சரக்குகளின் பேரில் ஈடுகடன்களும் கொடுக்கப்பட்டு வருகின்றன.

(தொடரும்)

"தன்குற்ற முணர்பவர் தரணியில் பெரியவர்."

11. செய்தித் திரட்டு:

அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்

1. தன் நிலத்தில் மாமூலாகப் போய்க் கொண்டிருக்கும்வாய்க்காலைத் தன் சௌகரியம் போல் நிலத்துக்குடையவர் மாற்றிக்கொள்ளக் கூடியதில்லையென்று 22—7—41ௗ யன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பாகியிருக்கிறது.

(Palaniappa Mudali versus Kumarasamy Gounder, wadsworth J.)

Mail.

2. நெல்லூர் ஜில்லாவில் சூளூர்ப் பேட்டைக்குச் சமீபமாக பழவேர்க்காடு ஏரியின் வடகோடியிலிருந்து 16 மைல் நீளம் 8மைல் அகலத்துக்குத் தரைக்குஅரையடிக்குக் கீழாகச் சில இடங்களில் இரண்டொரு அடி கனமும் அநேகமாக ஒன்று முதல் மூன்றடியாழத்திற்கு வண்டலோடு கலந்தும் உறைகளிக்கல் காணப்படுகிறது. தரைக்குக்கீழ் ஒரு அடி வேலை செய்து பார்த்ததில் ஒரு சதுர மைல் பரப்பில் 10000 தன் (ton) கிடைக்குமென்றும் இலாபகரமாயிருக்குமென்றும் தெரிகிறது. பத்துப்பன்னிரண்டு ஏகரில் 20 தன் எடுக்க 200—300 கூலியாட்கள் வேலை செய்ய வேண்டும்.

இதில் பிப்பிரவரிமீ 15ௗ யிலிருந்து ஜூலை மீ 15ௗ வரை வேலை செய்யலாம். மற்றக் காலம் தண்ணீர் வந்து கட்டிக்கொள்ளும். இந்த இடம் சூளூர்ப்பேட்டை இருப்புப்பாதை நிலயத்திலிருந்து 8 முதல் 12 மைல் தூரத்திலும் பக்கிங்காம் கால்வாயிலிருந்து 4 முதல் 8 மைல் தூரத்திலுமிருக்கிறது.

உறைகளிக்கல் உறைகளி (Plaster of paris)யும் செமண்டும் செய்வதற்கும் தீயையுந்தாங்கும் சுவர்ப்பட்டைகள் (Fire proof wall boards) செய்வதற்கும் உதவும்; உவரையும் போக்கும்.

Press Note No. 118.

3. ஐக்கிய மாகாணத்தில், நெசவிலும் அச்சுக் குத்துதலிலும் 491 புதிய ரகங்கள் உண்டுபண்ணப்பட்டிருக்கின்றன; அவற்றில் 1939-40ம் வருடத்தில் மட்டும் 97 ரகங்கள் உண்டுபண்ணப்பட்டன. அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குப் போகும் சவுக்கடித் துணிகளும் அழகான உட் சட்டைத் துணிகளும் (Shirtings) கழுத்துக் கட்டுக்கான (Neckties) துணிகளும், பல நிறத் துருக்கித் துவாலைகளும் புது மாதிரி திரைச்சீலைகளும் கைப்பை மிதியடித் துணிகள் முதலியனவும் இந்தப் புதிய ரகங்களில் அமைந்திருக்கின்றன.

மத்திய மாகாணம் பீரார் நெசவுகாரர் கூட்டுறவுச் சங்கத்தால் பல வேறு ரக சீலைகள் நெய்யப் பட்டன. நாகப்பூர் துணிகளுக்கு மற்ற மாகாணங்களிலும் பிரிய மிருக்கிறது. அந்தச் சங்கம் திரைச்சீலைகளும் மேசைவிரிப்புகளும், தலைப்பாகைத் துணிகளும், கைக்குட்டைகளும், அழுக்குத் துடைக்கும் துணிகளும் நெய்கிறது.

பம்பாயிலும் கைத்தறித் துணிகளைச் சனங்கள் விரும்பிவருகின்றனர். நெசவுகாரர்களும் நோக்கமாக விற்கக்கூடிய புது மாதிரித் துணிகள் நெய்து வருகின்றனர். புது ரகங்கள் போட்டுக் காட்டி வருபவர் (The textile designer) 1939-40ம் வருடத்தில் அச்சுக்குத்து உட்சட்டைத் துணிகளில் 9 ரகங்களும் மேல் சட்டைத் துணிகளில் 30 ரகங்களும் 25 சீலை ரகங்களும் கரைக்கட்டுப் போட்ட 16 கைக்குட்டை ரகங்களும் வேறு சுமார் 12ரகங்களும் போட்டுக் காட்டியிருக்கின்றனர்.

Bombay Information.

4. சட்டி பானை வனைவதில் திருந்திய முறைகள் முதல் முதல் நம் நாட்டில் மைசூர் அரசாங்கத்தால் சப்பான் போய்ப் படித்துவந்த திரு. அரிகானைக் கொண்டு பரப்பப்பட்டன. அவரிடம் பயிற்சிபெற்ற வாசுதேவன் சமர்ப்பித்திருக்கும் திட்டத்தைக்கொச்சி அரசாங்கம் சேர்ப்பு என்னும் கிராமத்தில் நாளிது ஆகஸ்டு முதல் அமுலுக்குக் கொண்டு வரத் தீர்மானித்து அதற்காக ரூ. 500ம் அனுமதித்திருக்கிறது.

Mail.

ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள்

1. புரோச்சு பஞ்சமகால் சில்லா கிராமாபிவிருத்திக் கழகங்கள் சென்ற ஜூலை 27ம் தெப்தியன்று மரம் நடுநாள் கொண்டாடின. புதிதாக மா, புளி, வேம்பு, நாவல், ஆல், ஆரசு முதலிய மரங்கள் நடப்பட்டன. அடுத்த ஆண்டு ஜூன் மாதம் வரை இந்த மரங்கள் வளர்ந்திருப்பதைப் பார்த்து, இந்த மரங்களை நட்டிருக்கும் கிராமங்களுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும், தனி நபர்களுக்கும் பரிசுகள் கொடுக்கப்படும். சாலையிலும் வெட்டை வெளிகளிலும் மரங்கள் வைத்து வளர்த்து வருவதற்குக் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் நிலமில்லாதவர்கள் அரசாங்க நிலங்களில் மரங்கள் வைத்து வளர்த்துவருவதற்காக அவர்களுக்கும் பரிசுகள் கொடுக்கப்படும்.

இரத்தினகிரித்தாலுகா கணு கச்சாம்பா கிராமங்களில் சாதாரண மாமரங்களிலும் அல்பன்சோ மரங்களை ஒட்டுக்கட்டி முதல் தரமான பழங்கள் காய்க்கும்படி செய்வ தெப்படியென்று செய்து காட்டப்பட்டது. நூற்றுக் கணக்கான கன்றுகளும் விதைகளும் அன்று நடப்பட்டன. சிப்லம் தாலுகா நிர்வாணி கிராமத்தில் கிராமாபிவிருத்திக் கழகம் சமீபத்தில் 1000 கன்றுகளும் நாறுகளும் நட்டிற்று.

Bombay Information.

(நம் மாகாணத்திலும் மரங்கள் நட்டு வளர்த்து வருவதற்காகப் பரிசுகள் கொடுக்கலாம். புறம்போக்குகளில் வைத் துண்டு பண்ணிக் குழைகளை விறகை யுபயோகித்துக் கொள்ளலாம் என்றிருக்கும் விதிகளையும் பெருவாரியாக அமுலுக்குக் கொண்டு வரலாம். ஏழை விபசாயிகளுக்கு உதவாத தலைவர்களும் அதிகாரிகளும் அவர்கள் வாக்குரிமையையும் பண உதவியையும் விரும்புவதுதான் என்ன நியாயம்? ப—ர்.)

2. இந்தூர் இராச்சியத்தில் இந்துக்களின் திருமணச் செலவுகளையும் இழவுச் செலவுகளையும் ஒழுங்குபடுத்துவதற்காக இந்தூர் திருமணச் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் என்றொரு சட்டமும் இழவுச் சட்டம் என்றொரு சட்டமும் இரண்டு புது மாதிரிச் சட்டங்கள் அமுலிலிருந்து வருகின்றன. அவற்றின்படி சாதாரணமாக எவரும் 101 பேருக்குமேல் விருந்து செய்யக்கூடாது; அவசியமானால், திருமணங்களில் முதல் வகுப்புக்குற்ற விசாரணையதிகாரி (Magistrate) அனுமதிபெற்று 500 பேர் வரைக்கும் இழவுகளில் சில்லா நீதிபதியனுமதிபெற்று 400 பேர் வரைக்கும் விருந்தளிக்கலாம். மீறிச் செய்பவர்கள் இந்தச் சட்டங்களின்படி தண்டனைக்குள்ளாவார்கள். இந்தச்சட்டங்களை நிறைவேற்றுவதில் நேரும் சங்கடங்களை உத்தேசித்து வருடத்திற்கு இத்தனை பிரியாதுதான் செய்வதென்று வரையறை செய்து வரப்படுகிறது. இவ்வளவிலும், விருந்துச் செலவுகள் வெகுவாகவும் குறைந்து வருகின்றன.

Rural problems in the holkar.

இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

1. கைத்தறி நெசவுகாரர் கூட்டுறவுச் சங்கங்களை விருத்தி செய்வதற்காக ஒரு பதிலிப்பதிவாளர் நியமுகத்தைச் சென்னை அரசாங்கம் இரண்டு வருடத்திற்கு அனுமதித்திருக்கிறது.

Mail.

2. புது வருடங்கட்குமுன் 1930-31ல் வேலை துவக்கிய இந்து முஸ்லீம் ஐக்கிய நாணயச்சங்கம், வெங்களூர் (புதுக்கோட்டை) ஆரம்பமுதல் இலாபத்திலேயே வேலை செய்து வருவது நம்மகிழ்ச்சிக்குரிய காரியமாகும். என்றாலும், 1937-38 முதல் அங்கத்தினர்

எண்ணமும், பங்கெண்ணமும், பங்குத் தொகையும், இருப்புத்தொகை (Deposits) வரவும், கொடுக்கல் வாங்கலும் குறைந்தே வருவதும் புதுக்கடன்கள் கொடுத்து வந்தும் சென்ற மூன்று வருடங்களாக மொத்தக் கடனில் ஐந்தில் ஒரு பங்குக்கு மேலும் அடுத்தும் தவணைகடந்திருப்பதும் விரைவில் தவிர்க்கப்படவேண்டியனவாகும்.

3. போதார் கல்லூரியில் (Bodar college) சாத்திரமும் (Sciene) அங்க அமைப்பும் (Anatomy) உடற்கூறும் (Physiology) இரணவைத்தியமும் (Surgery) பிரசவ வைத்தியமும் (Mid wifery) மேல் நாட்டுக் கீழ் நாட்டு முறைகளில் சிறந்தனவாகக் காணப்படுவனவே போதிக்கப் படும். இந்தக் காலத்தில் அன்னியமென்று எதனையும் அனுதரவு பண்ணுமல் உண்மை யானவற்றை யெல்லாம் அவசியம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

Bombay Information.

(சென்னை இந்திய வைத்தியக் கலாசாலை யிலும், இதே மாதிரியாகக் கல்வி போதிப்பதே உசிதமாகும். ப—ர்.)

4. பொதுசனப் புத்தகசாலைகளுக் கென ரூ. 35000 மும் நகராண்மைக்கழகப் புத்தகசாலைகளுக்கென ரூ. 25000மும் கிராமப் பஞ்சாயத்துப் புத்தகசாலைகளுக்கென ரூ. 10000 மும் சென்னை அரசாங்கம் ஒதுக்கி வைத்திருக்கிறது.

Hindu.

(நம் மாகாணத்தில் முக்காலேயரைக்கால் வாசிக்குமேல் கிராமங்களாக இருக்க, அரசாங்க வருமானத்தின் பெரும்பாகம் கிராம வாசிகள் செலுத்தும் வரிப்பணமாக இருக்க—கிராமவாசிகள் தங்கள் உரிமைகளின்னதெனத் தெரிந்து அவற்றிற்காகக் கிளர்ச்சிகள் செய்யா திருக்கும்வரை, அவர்களுக்கு இத்தகைய மரியாதையே கிடைக்கும்.ப—ர்)

5. இராமநாதபுரம் ஜில்லாக்கழகம்1941-42ம் ஆண்டு ஆரம்பக் கல்வி நிதி வரவுசெலவு திட்டத்தின் பேரில் அரசாங்கம் கீழே கண்டபடி உத்தரவு செய்திருக்கிறது.

வரவைக் காட்டிலும் செலவு அதிகமாகிக் கொண்டுவருகிறது. கல்விவரி $3\frac{1}{4}$ பைசாவாக இருப்பதை $4\frac{1}{2}$ பைசாவாக 1941-42ம் ஆண்டு முதல் உயர்த்தவேண்டும்; அல்லது நிலவரியின் மேல் விதிக்கும் வரிவிகிதத்தை (Land cess) கால்வாசி கூட்டவேண்டும், ஆசிரியர்களுடைய சம்பளத்தைக் குறைக்கக்கூடாது, செட்டுநிதி (Provident Fund) யிலிருந்து கல்வி நிதிக் குறைவிற்கு ஈடு பண்ணக்கூடாது, தேவையான தொகையை அரசாங்கத்திலிருந்து $4\frac{1}{2}$வட்டிக்கு வாங்கிக்கொண்டு 5 வருடத் தவணைகளில் செலுத்திவிட வேண்டும்.

ஜில்லாக்கழகப் பள்ளிக்கூடங்களை மூடுவதானாலும் ஆசிரியர்கள் உத்தியோகங்களைக் குறைப்பதென்றாலும் மற்றும் இவைபோன்ற காரியங்கள் செய்வதென்றாலும் ஜில்லாக்கல்வியதிகாரியைக் கலந்தே ஜில்லாக் கழகத்தலைவர் செய்யவேண்டும். தவறினல், இந்த உத்தரவுகளை மீறிச் செய்வதால் ஏற்படும் செலவுகளை அவருடைய சொந்தத்திலிருந்து பொறுக்க வேண்டியதுவரும்.

சென்ற ஆகஸ்டுமீ 11வ யன்று கூடிய ஜில்லாக்கழகக் கூட்டத்தில் நாளிது வருடம் ஏப்ரல்மீ முதல் ஆசிரியர்களின் சம்பளத்தைக் குறைக்காமல் கொடுத்துவருகிற தென்றும், அரசாங்கத்திலிருந்து 57000ரூபா கடன் வாங்கி ஐந்து வருடத்தில் திருப்பிக் கொடுத்து விடுகிறதென்றும் கல்விவரியை $\frac{1}{2}$ பைசா கூட்டிக்கொள்ளுகிறதென்றும் தீர்மானம் செய்யப் பட்டிருக்கிறது.

Mail.

"வஞ்சக முடையான் வஞ்சிக்கப் படுவான்."

ஈ. கூட்டச் செய்திகள்.

1. நாளிது வருடம் ஏப்பிரல்மீ 15ம்வ புதுதில்லி (Delhi) யில் உயர்தர விபசாய ஆராய்ச்சிக் கழகத்தின் (The Imperial Council of Agricultural Research) அரிசியுட்கழகக் (The Rice Commitee) கூட்டத்தீர்மானங்களின் சாரம்.

1. சென்ற பத்துவருடங்களாகச் சாகுபடியாகிவரும் பரப்பையும் விளைவையும் கவனிக்கும்பொழுது, விளைவு வருடத்திற்கு வருடம் அதிகமாகி வரவேண்டியது போகக் குறைந்தே வருகிறதென்றும் பழைய விளைவாவது இருந்துவரும்படி செய்யவேண்டிய தவசியமென்றும் சிபார்சு செய்யப்படுகிறது.

அ. இப்பொழுது சௌகரியமில்லாத பிரதேசங்களிலும் கால்கள் குளங்கள் முதலியவற்றின் மூலம் போதிய பாய்ச்சல் சௌகரியம் காலாகாலத்தில் செய்துதவவேண்டும்.

ஆ. ஏராளமாக உரமும் முக்கியமாக எண்ணெய்ப் பிண்ணாக்கும் பயிரிடுபவர்களுக்குக்கொடுத்துதவி அதன் கிரயத்தை அறுவடையாகவும் வசூலித்துக் கொள்ளவேண்டும்.

இ. சுத்தமான திருந்திய விதைகளைப் பயிரிடுபவர்களுக்குத் தாராளமாகக் கொடுத்துவரவேண்டும்.

ஈ. நெல் சாகுபடிக்குப் பின்னதாக காணம் முதலிய பயறுகள் போன்ற கோடைப் பயிர்கள் சாகுபடி செய்வதை விருத்திசெய்ய வேண்டும்.

உ. வேறு மாசூல்கள் சாகுபடி யில்லாதிருக்கும் நிலங்களிலெல்லாம் கூடியவரை நெல் சாகுபடி செய்யவும் தூண்டவேண்டும்.

2. நெல் சாகுபடியாகும் நிலங்களுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சல் மிகவும் அவசியமாதலாலும் நெற்சாகுபடி குறையாதபடிக்குச் செய்துவர வேண்டியதும் அவசியமாதலும் நெற்சாகுபடி செய்துவரும் எல்லா மாகாணங்களும் சுதேச இராச்சியங்களும் தண்ணீர்ப்பாய்ச்சல் சம்பந்தமாக மிருந்த அக்கறை யெடுத்துக் கொள்ளவேண்டும்.

3. திருந்திய விதைகள் 9 சதமான பரப்பிலேயே சாகுபடி செய்யப்படுவதாலும் விதைகளால் மட்டும் 10 சதமானமே அதிக விளைவு ஏற்படக் கூடுமாதலாலும் அப்படியதிகவிளைவும் காலக்கோளாறுகளால் அற்றுப் போவது மல்லாமல் முன்னிருந்த விளைவிற்கும் குறைந்துபோகக் கூடுமாதலாலும் அதிக விளைவைக் காண்பதற்கு திருந்திய விதை மட்டும் போதாது. தண்ணீரும் உரமும் வேண்டும். அந்தந்த நிலத்திலேயே வளருவதாயிருப்பினும் பிற இடங்களிலிருந்து கொண்டு வருவதாயிருப்பினும் பசுந்தாளுரமே குறைந்த செலவில் நல்ல உரமாக அமையக்கூடும். நெல் விலை மணு 4 ரூபாவாக விற்கிற காலத்திலும் மணு 1—8—0 ரூபாவாகக் கடலைப் பிண்ணாக்குரம் விற்குமென்றால், அந்த உரமிடுவதால் இலாபமுண்டு.

Indian Farming.

---

1. அறிவுரைத் திரட்டு.

அ. விபசாய வியாபார கைத்தொழிற் குறிப்புக்கள்.

1. ஓர் எலி வருடம் ஒன்றுக்கு 6 இராத்தல் எடையுள்ள தானியத்தைத் தின்கிறது. (மாதம் ஒரு படி நெல்கூடத் தின்றுவிடும். ப-ர்.) நம் நாட்டு விபசாயிகளுக்கு எலியால் உண்டாகும் பொருட் சேதம் மாத்திரம் 22 கோடி ரூபா.

(இந்திய விபசாயிகளின் கடன்.) அ. முத்தையா.

2. ஒவ்வொரு கைதிக்கும் உணவு உடைக்காக அரசாங்கத்தாரால் வருடத்துக்கு 90 ரூபா செலவழிக்கப்படுகிறது. கைதிக்காக 90 ரூபா செலவாகிற பொழுது, விபசாயிகளின் மொத்தவருட வருமானம் 50 அல்லது 60 ரூபாவாக இருந்து வருகிறது. இதிலிருந்து பெரும்பாலான விபசாயிகள் கைதிகளின்

வாழ்க்கையைவிட மோசமான, பரிதாபகரமான, ஏழ்மையான, துர்ப்பாக்கியமான வாழ்க்கையை நடத்துகிறார்களென்பது புலனாகின்றது அல்லவா?

(இந்திய விபசாயிகளின் கடன்.) அ. முத்தையா.

3. மேல் நாடுகளிலே எந்த விபசாயியின் நிலமும் சேர்ந்திரணையாகவே இருக்கும். அந்த நிலத்தின் நடுவிலேயே ஒரு குடிசை (Cottage) கட்டிக் கொண்டு அந்த விபசாயி குடியிருப்பான். அவன் மாடு கன்று முதலியன அங்கேயே இருக்கும். அவற்றின் மூத்திரம் சாணம் முதலியவற்றை ஒரு சிறிதும் சேதமாகாமல் காப்பாற்றி எருவாக உபயோகப்படுத்தக் கூடும். நிலத்தை வேலிகோலிக் காப்பாற்றவுங் கூடும். எந்தப் பயிரை வேண்டுமானாலும் இடமுடியும். இப்படிப்பட்ட சௌகரியங்களெல்லாம், நம் விபசாயிகட்கு இல்லாதது ஒரு பெரிய குறை. ஒவ்வொரு தலைமுறையிலும் ஒவ்வொரு விபசாயியின் நிலமும் குறைந்து கொண்டும், மேலும் மேலும் சிதறுண்டும் போகின்றனவே அல்லாமல், ஒன்று சேரும் வழியில்லை.

(இந்திய விபசாயிகளின் கடன்.) அ. முத்தையா.

4. இந்திய மாகாணங்களிலே, சென்னை மாகாணமே பரப்பில் முதலாவதாக இருக்கிறது. மொத்த சனத்தொகையில் மூன்றாவதாகவும் சன நெருக்கத்தில் நான்காவதாகவுமிருக்கிறது.

தொழில் விருத்தி அதிகமாயிருக்கிற நாடுகளிலே மொத்த வரும்படி அதிகமாய் இருக்கும்; சனங்களின் சராசரி வரும்படியும் அதிகமாகவே இருக்கும். ஆகையால், தொழில் செழித்த நாடுகளிலே சன நெருக்கம் அதிகமாக இருந்தால், அதனால் சங்கடம் ஒன்றும் நேரிடாது. விபசாய நாடுகளிலோ, அப்படியல்ல. சனங்கள் அதிகமாகிற அளவு பொருள் உற்பத்தி அதிகமாக விருத்தி அடைவதில்லை. ஆகையால், விபசாய நாடுகளில் சன நெருக்கம் அதிகமாக இருக்கக் கூடாது. அப்படியிருந்தால், சராசரி வருமானம் குறைவென்றே அறிய வேண்டும்.

(இந்திய விபசாயிகளின் கடன்) அ. முத்தையா.

5. சப்பானில் ஒரு மனிதனுக்கு வேண்டிய உணவுப் பொருளை ஓர் ஏகராவின் மூன்றில் ஒரு பங்கு நிலத்திலிருந்து விளைவித்துக் கொள்ளுகிறார்கள். நம் நாட்டிலோ, அதே அளவு விளை பொருளை உண்டாக்க ஓர் ஏகரில் ஆறில் ஐந்து பங்கு நிலம் ($\frac{5}{6}$) வேண்டியிருக்கிறது.

(இந்திய விபசாயிகளின் கடன்.) அ. முத்தையா.

6. விபசாயத்தை ஒரு லாபகரமான தொழிலாக நடத்த வேண்டுமானால்; நூற்றுக்கு வருடத்துக்கு நாலைந்து வட்டிக்கு மேல் கொடுத்துக் கடன் வாங்கக் கூடாது. அதற்கு மேல் அதிக வட்டி கொடுத்துக் கடன் வாங்கினால், வட்டியைக் கொடுக்கக்கூட முடியாது.

(கடன் நிவாரணச் சட்டமும் அதன் விபரங்களும்.) அ. முத்தையா.

7. நம் நாட்டில் ஓர் ஏகரில் 75 இராத்தல் பஞ்சுதான் விளைகிறது. அமெரிக்காவில் ஏகர் ஒன்றுக்கு 180 இராத்தல் பஞ்சும் எகிப்தில் ஏகர் ஒன்றுக்கு 300 முதல் 400 இராத்தல் வரையிலும் பஞ்சு விளைகிறது.

நம் நாட்டில் ஓர் ஏகரில் சருக்கரை எவ்வளவு உண்டாகக்கூடுமோ, அதைப் போல் கியூபாவில் (Cuba) மூன்று பங்கு விளைகிறது. நம் நாட்டில் ஒவ்வோர் ஏகரிலும் விளைவதைவிட ஆறு பங்கு அதிகமாக சாவகத்தில் (Java) கரும்பு விளைகிறது; ஏழு பங்கு அதிகமாக ஆவாவில் (Hawa) விளைகிறது.

(இந்திய விபசாயிகளின் கடன்.) அ. முத்தையா.

8. விபசாயமானது பயிர்களை யிட்டு அதன் வழியாக ஒரு வகைப் பிழைப்பை நடத்துவதற்கான முயற்சி என்று எண்ணுவது தவறு. அது ஒரு தொழிலோ அல்லது வியாபாரமோ அன்று; தேச நன்மைக்காக, தேச நிலங்களைப் பாதுகாத்து வளம்படுத்திப் பயிர் செய்வதின் மூலம் தனிப்பட்ட விபசாயிகள்,

தேசசேவையாகிய ஒரு காரியத்தைச் செய்து வருகிறார்கள். விவசாயிகள் தங்களுடைய நன்மைக்கும் இலாபத்துக்கும் பயிரிட்டாலுங்கூட, அது தேச வாழ்க்கையைப் பாது காக்கும் அடிப்படையான காரியமாய் விளங்குகிறது. ஆகையால், பொதுசனக் கருத்திலும், பொது மக்கள் ஆதரவிலும் வளரவேண்டிய தொழில் விவசாயமாகும். தேச அரசாங்கம், தேசிய முறைகளைக் கைக்கொண்டு விவசாயத்தை விருத்தி செய்ய வேண்டும். ஆழ்ந்த யோசனையுடன், நீண்ட கால நன்மையைக் கருதியே விவசாயம் பாதுகாக்கப்பட வேண்டும். அரசாங்கம் செய்ய வேண்டிய காரியம், விவசாய சம்பந்தமான இயற்கை நிலையையும், மக்களையும் காப்பாற்றுவது மட்டும் அன்று. தேச பாதுகாப்புக்காகவும், எல்லா வகைச் செழிப்புடனும் தேசம் முன்னேறுவதற்காகவும், சமூக அரசியல் வலிமைக்காகவும் விவசாயம் விருத்தி செய்யப்படவேண்டும்.

(கடன் நிவாரணச் சட்டமும் அதைப்பற்றிய விபரங்களும்) அ. முத்தையா.

9. 100 தன் தென்னங் கொப்பரை 65 தன் தேங்கா யெண்ணெய் கொடுக்கும். எனவே 1 தன் கொப்பரையிலிருந்து 13 அந்தர் எண்ணெய் கிடைக்கும்—அதாவது சற்றே அதிகமாக $1\frac{1}{2}$ தன் கொப்பரை 1 தன் எண்ணெய் கொடுக்கும்.

கூட்டுறவு,

10. காங்கிரீட் ஒரு சிறந்த எரு:-

1. கொஞ்சகாலமாக அழகிற்காகக் கற்பாறைகளில் பயிர் செய்யப்படும் செடிகளுக்கும் தழையழகு வாய்ந்த செடிகளுக்கும், குரோட்டன் செடிகளுக்கும், அனேகமாகச் சட்டிகளில் வளர்க்கப்படும் பயிர்களுக்கும் காங்கிரீட்டை ஒரு நல்ல எருவாக உபயோகப்படுத்தி வருகிறார்கள். வேண்டிய அளவு காங்கிரீட் இடிந்த வீடுகளில் கிடைக்கிறது.

2. காங்கிரீட் பூமியை உறைந்து போகாமற் காப்பாற்றுகிறது. மண்ணை அது நித்திக்கச்செய்கிறது. சிறிய சட்டிகளில் வைக்கும் செடிகளுக்குக் கொட்டைப்பாக்கு அளவு உடைத்துப்போடலாம். காங்கிரீட்டை மண்ணுடன்சேர்ப்பதால் மண்ணைப் புளித்துவிடாமலும் சகதியாய்ப்போகாமலும் காப்பாற்றுகிறது. செடியின் நுண்ணிய வேர்கள் காங்கிரீட் சல்லிகளை அழகாய்ச் சுற்றிக்கொள்ளப் பிரியப்படுகின்றன.

செடிகளுக்கு வேண்டிய எரு தயார் செய்யும் முறை.

மண்	2 பாகம்.
மடித்தசாணி	2 பாகம்.
மக்கிய தழைகள்	2 பாகம்.
ஆற்று மணல்	1 பாகம்.
சாம்பல்	1 பாகம்.
பழங்காங்கிரீட்	2 பாகம்.

Indian Farming.

11. உணவருந்த நம்நாட்டில் விருந்தாளிகளை எவ்விதம் உபசரிக்கின்றோமோ அவ்விதமே 'சப்பானியர்' மலங்கழிக்க உபசரிக்கின்றனர். கக்கூசுகளை அவர்களே சுத்தி செய்து மலஉரம்சேகரிக்கின்றனர். மலத்தைக் குடங்களில் போட்டுத்தண்ணீர்விட்டு நன்றாய்க் கலக்கி அதை நிலங்களுக்குத் தண்ணீர்பாயும் பொழுது அத்தண்ணீரில் சிறிது சிறிதாக ஊற்றிப் பயிர்களுக்கு உரமாகும்படி செய்கிறார்கள். இப்படிச் செய்வதில், நம்மைப்போல் அவர்கள் அருவருப்புக் கொள்வதில்லை. இதனால், சுகாதார வழி செவ்வனே ஏற்படுவதுடன் சிறந்த உரப்பொருளும் கிடைக்கிறது. மலம் வேர்ச்சத்து மிகுதியாயுள்ள எருவாகும். கிழங்கு, காய்கறி, பழ வகைகள் முதலிய பயிர்களுக்குச் சிறந்த எருவாக உதவும். புகையிலை போன்ற இலைப்பயிர்களுக்கு உரமாக வழங்கினால், அவ்விலைகள் தடித்து அதிக நிறையுள்ளனவாயிருக்கும். சப்பானியர் அதனை உரமாகத்தயாரிப்பதை விட, வேறொரு வழியில் அதனைச் சிறந்ததாகச் செய்யலாம். பெரிய தொட்டிகளில் மலத்தைப்போட்டுத் தண்ணீரைவிட்டு நன்றாகக்கலக்கி அத் தண்

ணீரைச் சாம்பல் அல்லது அது போன்ற தண்ணீரை உறிஞ்சும் பொருள்களில் ஊற்றி வெய்யிலில் உலரவைத்துப் பைகளில் போட்டு மூட்டையாக்கி வைத்துக்கொண்டு, பின்பு வேண்டும் காலங்களில் நிலத்திலிடலாம். இப்படிச் செய்வதில், நிலத்திலிடுவதற்கு முன் சேமித்து வைத்திருக்கும் காலத்தில் அதனின்றும் துர்நாற்றம் எழாது; ஆனால், நிலத்திற்கு வழங்கப்படுவதன் முன் ஈரம் படாமல் பார்த்துக்கொள்வது முதன்மையாகும்.

(செந்தமிழ்ச் செல்வி) வேங்கடாசலம்.

ஆ. கிராமப்புனருத்தாரண தேச முன்னேற்றக் குறிப்புக்கள்

1. பணக்காரர்களுடைய சொத்தெல்லாம் பறிமுதல் செய்யப்பட வேண்டுமா?:— அகிம்சா தருமத்தின்படி பறிமுதல் செய்யக் கூடாது. எவ்வித பலவந்தத்தாலும் மனித சமூகத்துக்கு நீடித்த நன்மை யுண்டாகக்கூடியதில்லை. அப்படிப்பலவந்தமாய்ப் பறிமுதல் செய்வதால், நாம் அனேக நன்மைகளையும் இழந்து விடக்கூடும். பணக்காரனுக்கு எப்படிப் பணம் சேர்ப்பதென்றும் எப்படி அதை விருத்தி செய்வதென்றும் தெரியும்; அந்தத் திறமையை இழந்து விடக்கூடாது. அவனுடைய பணம் அவனிடத்திலேயே இருக்குமென்றால், அவன் தன் தேவையளவுக்குமட்டும் தான் எடுத்துக்கொண்டு மற்றவற்றிற்குத் தான் ஒரு தருமகர்த்தாவாக இருந்து அவற்றைச் சமூக நன்மைக்காகச் செலவிடவுங் கூடும். அப்படி மனிதர்கள் முன்னும் இருந்திருக்கிறார்கள்; இப்பொழுதிருக்கவும் செய்கிறார்கள். ஒருமனிதன் தன்னைச்சமூக ஊழியனாகக் கருதுகின்ற பொழுது, அதற்காகவே தான் சம்பாத்தியம் செய்வதும் அதற்காகவே தான் செலவழிக்கிறதுமாக இருக்கிற பொழுது, அவன் சம்பாத்தியம் நல்லதென்றும் அவனுடைய வியாபார முயற்சி அல்லது தொழில் ஓர் ஆக்க வேலையே யாகு மென்றும் நான் கருதுகிறேன்.

அகிம்சா தருமமென்றாலே அது மனித சுபாவத்தில் ஒரு பெரும் மாறுதலைக்குறிக்கிறதல்லவா? அப்படி மாறுதலை நாம் காண்கிறோமா? ஆம், காண்கவே செய்கிறோம். தனக்கெனச் சொத்தோடு சொத்துச் சேர்க்க வேண்டு மென்று அற்பத்தனமாக எண்ணி வாழ்ந்து வந்தவர்கள், சமூகத்திற்காகவே அதன் நன்மைக்காகவே வாழ ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படி மாறுதல் ஒரு மனிதனிடத்தில் உண்டாகுமென்றால், அது பல பேரிடத்திலும் உண்டாகக்கூடுமல்லவா?

நாளைய உலகத்தில் வறுமையென்பதிருக்காது; சண்டைகள், புரட்சிகள், இரத்தக்களரிகள் காணமுடியா. அந்த உலகத்தில் இதுவரை இருந்ததைக்காட்டிலும் அதிகமாக ஆழ்ந்த தெய்வ பக்தியும் காணப்படும். உலகம் நிலைத்திருக்கவேண்டுமென்றால்: அது சமயச் சார்பாலேயே கூடும். சமயத்தை வெட்டி வீழ்த்தச் செய்யும் பிரயத்தனங்களெல்லாம் தவறவே செய்யும்.

காந்தியடிகள்.

2. சிதறியும் ஒன்றுக்கொன்று வெகு தூரத்திலுமுள்ள பல கிராமங்களில் வேலை செய்வதைக் காட்டிலும் தொகுதியாகச் சேர்ந்திருக்கும் இரண்டு மூன்று கிராமங்களில் தீவிரமாக வேலை செய்வதே அதிக நல்ல பலனைத் தரும். பயிரிடுபவர்கள் புதிய விவசாயக் கருவிகளை உபயோகித்துப் பார்த்து அதனால் சௌகரியமிருக்கிறதென்று கண்டால் மட்டும் அவற்றை உபயோகிப்பார்கள். அவர்கள் நம்மால் நினைக்கவும் முடியாத அளவு வறுமையால் சங்கடப்படுகின்றனர். அவர்களுடைய வறுமையைத் தீர்ப்பதற்கான காரியங்களைச் செய்யாமல் கிராமக்கல்வியைப் பற்றியும் சுகாதாரத்தைப்பற்றியும் அவர்களுக்குப் போதிப்பது வயிற்று வலிக்காரனுக்கு மண்டையில் கொண்டுபோய்ப்பற்றுப்போடுவதுபோலாகும். கிராமந்தோறும் கூட்டுறவுச் சங்கம் வேண்டும். கூட்டுறவுப் போக்கும் பரவவேண்டும்.

கிராமந்தோறும் கட்சிகள் இருக்கவே செய்கின்றன; ஒருவரை யொருவர் நம்பாமலும் இருக்கின்றனர்; என்றாலும், மூன்றுவது ஆள் சுயநலமற்றவராக அவர்களுக்குதவி

செய்யப் போவாரென்றால், அவர்களுடைய பொருள்களை விற்றுத்தரவும் அவர்களுக்குத் தேவையானவற்றை வாங்கித்தரவும் அவர் செய்யும் ஏற்பாடுகளுக்கு அவர்களும் உதவியாக நிற்கவும் அவற்றில் ஊக்கமாகக் கலந்து கொள்ளவும் செய்வார்கள். கிராம வேலைகளெல்லாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து செய்யும் வேலைகளாக இருக்கவேண்டும்; ஒருவரே தலைவராக அவர்களுக்கு யோசனை சொல்லிவரவும் வேண்டும். பல பேர் மணியமாக இருந்தால், ஒரு காரியமும் நடவாது. எவர்பேச்சைத்தான் கேட்டுச் செய்வதென்பதாக மனம்கலங்கி ஒன்றையும் செய்யாதிருந்து விடுவார்கள். அவர்களை நாம் செய்யச் சொல்லும் வேலைகள் அவர்களுக்கே சரியெனப் படவும் வேண்டும். அவர்கள், தொண்டரை உண்மையானவரென்று கண்டு கொண்ட பின் அவருடைய பேச்சைத் தட்ட மாட்டார்கள். அவர்களுக்கே தாங்கள் விருத்தியாக வாழ வேண்டுமென்ற ஆசையும் ஒற்றுமை யுணர்ச்சியும் உண்டானாலன்றி, வெளி முயற்சியால் எவ்வித பயனும் ஏற்படாது.

(Rural India) S. R. Palande.

இ. இலக்கிய இலக்கண அருங்கலைக் கல்வி யாராய்ச்சிக் குறிப்புக்கள்

1. ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே:- தமிழ் நாட்டில் எல்லோரும் ஆடலாம்; எல்லோரும் பாடலாம் என்பதை ஒரு பெரியார் இப்பொழுது நமக்கெல்லாம் நினைவூட்டுகிறார். இவர் ஒரு வங்காளி. ஆகவே அவர் நமக்கும் ஒரு பங்காளிதான். அவர் பெயர் திரு. குரு சதேதத். (அவருடைய சரித்திரம், இந்த இதழிலேயே மற்றொருபக்கம் வருகிறது. ப-ர்.)

தாய் மொழியைத் தள்ளி விட்டு வேறு ஒரு மொழியை ஏற்றுக் கொள்ளும்படி அவர் சொல்லுவதில்லை. வடமொழியில் அவருக்குப் பற்றுதலுண்டு. என்றாலும், முற்காலத்தில் புலவர்கள் வடமொழியில் பேசினார்களென்றால், அவர்களுடைய வாழ்க்கைத் துணைவிகள் எம்மொழியில் பேசியிருக்க வேண்டும் என்கிற உருசிகரமான கேள்வியை அவர் செல்லுமிடமெல்லாம் தமிழர்களைக் கேட்டு வருகிறார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்கிற உண்மையைச் (சமீபத்தில் இறந்து போன ப-ர்) கவி இரவீந்திரநாத் தாகூர் உணர்ந்து கொண்டார். அவருக்குப் பின் இப்பொழுது தமிழ் நாட்டைச் சுற்றிப் பார்த்து வருகிற திரு. சதேதத் உண்மையை அறிந்திருப்பது குறிப்பிடத் தக்கது. தமிழ் என்கிற வார்த்தைக்கு இனிமை என்பது பொருள். இதைச் சில தமிழர்கள் உணராமலில்லை. ஆனால், அதன் இனிமை குறைந்து வருகிறது. இந்த மாறுதல் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இப்பொழுது உள்ளவர்கள் இந்தச் சங்கடத்திற்கு ஓரளவுக்குத்தான் பொறுப்பு ஏற்றுக் கொள்ள முடியும். ஏனென்றால், திருவாட்டி நீலாம்பிகையம்மையார் குறிப்பிட்டிருப்பது போல் "சென்ற எழுநூறு ஆண்டுகளாக நந்தாய் மொழியாகிய செந்தமிழ்ச் சீரிய மொழியில் ஏராளமான வட சொற்கள் வந்து கலந்து விட்டன. ஐயகோ! பழந்தமிழ்ச் சொற்களிற் பல வழங்காதும் ஒழிந்தன."

பண்டைக் காலத்திய தமிழர்கள் வாழ்க்கை இன்பத்தை நன்கு உணர்ந்தவர்கள். கூத்து இலக்கணத்தை விவரித்துக் கூறுகிற அக்காலத்திய நூல்கள் மறைந்து போயின.

இது தமிழர்களின் தலைவிதிபோலும். அகத்தியம் பரதம் போன்ற நூல்கள் காணக்கிடைக்கவில்லை; ஆனால், அவற்றின் சுவை எப்படியிருந்திருக்கலாம் என்பதைச் சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக்காதை கடலாடுகாதை முதலிய பகுதிகளைப் படித்து ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். ஆடல்பாடல்களை விவரித்துக் கூறும் வகையில் சிலப்பதிகாரம் நிகரற்ற ஒரு நூல் என்றும் உலகத்தில் இதைப் போன்ற மணி ஆரத்தைக் காண்பது அரிது என்றும் ஆராய்ச்சிக்காரர்கள் நம்புகிறார்கள்.

பலவகைக் கூத்துக்கள் தமிழர்களுக்குச் சொந்தமானவை. பல்கலைக் கழகங்களில் கல்வி கற்றவர்கள் இவற்றை மதிக்காவிட்டாலும், இந்தக் கூத்துக்கள் தமிழ் நாட்டில் குற்றுயிருடன் இருக்கின்றன. இவையெல்லாம் புத்துயிர் பெறும் காலம் வந்து விட்டது (வந்துவிட்டதா? ப-ர்.) என்று நினைக்கும் போது ஆறுதல் உண்டாகிறது.

பள்ளு, உழவர் பிரபந்தம். பள்ளர் என்றால் உழவர். உழவர்களுடைய ஆடல் பாடல்கள் தமிழ் நாடெங்கும் வழக்கத்திலிருக்கின்றன. அவற்றை நேரில் கண்டு களிப்பதற்காகத்தான் திரு. தத் இப்போது (இதனைக் கூட்டுறவு ஆசிரியர் எழுதியபொழுது ப-ர்.) நமது நாடெங்கும் சுற்றிவருகிறார். உழவர்களுடனும் தாழ்த்தப்பட்ட மக்களுடனும் அவர் சேர்ந்து ஆடுகிறார். அவர்கள் கையிலிருக்கும் பறை அல்லது முரசு என்கிற கருவியைத் தாமே எடுத்துக் கொண்டு பறை கொட்டுகிறார். இதைக் காணும்பொழுது, உள்ளங் குளிருகிறது. இதுதான் பொதுநல சேவை, இதுதான் விடுதலை, இதுதான் ஒற்றுமைக்கு உற்ற வழி.

திரு. குருசதேதத்—யார் தெரியுமா? அவர் ஒரு பெரிய அதிகாரி. ஜில்லா கலக்டர் உத்தியோகத்தை முடித்துக் கொண்டு ஓய்வு எடுத்துக் கொள்ளப் போகிறார். அவருக்கு வயது 59 ஆய் விட்டது. ஒரு குமரனைப் போல் ஆடுகிறார்; பாடுகிறார். (நம் நாட்டின் துரதிட்டம் இவருடைய பூரண சேவை கிடைப்பதற்கில்லை; இவர் சமீபத்திலிறந்து போனார். ப-ர்.)

ஆடுவதும் பாடுவதும் பெரிதல்ல. 'ஆடல் பாடல்கள் மூலமாகப் பொதுநல வேலை செய்ய முடியும்; ஏழை பணக்காரன் என்கிற வித்தியாசமில்லாமல் மக்களிடத்தில் பழக முடியும்' என்பதை அவர் செய்து காட்டுகிறார். வங்காளத்திலிருந்து அவருடன் வந்திருக்கிற பத்து ஆசிரியர்கள் அவரோடு கலந்து ஆடுகிறார்கள். அவர்களுக்கு விரதச்சாரிகள் என்று பெயர். ஐந்து முக்கிய விரதங்களை வாழ்க்கையில் நடத்திக் காட்டுவதாக யார் வாக்குறுதி கொடுக்கிறார்களோ அவர்களெல்லாம் விரதச்சாரிகள். சிறுவர்களும் சிறுமிகளும் அதிகாரிகளும் அதிகாரப்பற்றில்லாதவர்களும் இந்த இயக்கத்தில் ஆயிரக் கணக்கில் சேர்ந்திருக்கிறார்கள் (விரதச்சாரி யியக்கத்தைப் பற்றி அடுத்த இதழில் எழுதுவோம். ப-ர்.)

ஈ. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

ஆள்வினையும் மனத்திட்பமும்

"தாளாண்மை யென்னுந் தகைமைக்கட்டங்
கிற்றே வேளாண்மை யென்னுஞ் செருக்கு".
—திருக்குறள்.

'நமது சங்கற்பத்தை (திடபுத்தியை—தீர்ந்த மனவுறுதியை)ப் பயிற்சி செய்து பண்படுத்தி நல்வழிச் செலுத்துவதே நம் நல்வாழ்விற் கேற்றமோர்பயன்' என ஒரு மேனாட்டுப் பேராசிரியர் உரைத்திருக்கிறார். அது ஒரு

பொய்யா மொழியே, ஒரு சீவான்மாவின் சங்கற்பத்துக்கும் பரமான்மாவுக்கு முள்ளதோர் உறவுமுறையையே அது குறித்து நிலைநாட்டுகின்றது. அது தெய்விகத்தன்மை வாய்ந்தது. திடசங்கற்பத்துடன் தொடங்கி விடா முயற்சியுடன் தொடர்ந்து வந்து தளராத நெஞ்சத்துடனும் விடாப் பிடியுடனும் பின்பற்றி வந்து அடையக்கூடிய பொருளன்றே அப்பரம் பொருளும்? அப் பெறலரும் பெரும்பயன் ஆண்மையுடனும், ஆள்வினையுடனும், உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் உழைத்தே பெறக்கூடிய பொருளன்றே? உள்ளத்திலோர் கள்ளமுமின்றி ஒருப்படவேண்டும்; மனம் ஒன்றி நிற்றல்வேண்டும்; கருத்து ஊன்றி ஒருமித்தல் வேண்டும். அப்பொழுது தான் அப்பெரும் காரியம் சாதிக்கலாம். இன்றேல் காரியம் கைகூடுவதரிது, இதுபற்றியே மற்றோர் பெரியாரும் "விசேட நலமென்பது ஒருவனது முதிர்ந்த சங்கற்பமேயாம்" என்று புகழ்ந்துரைத்திருக்கின்றனர். ஒருவனது குணமே தான் அவனை அவன் விதியைக் குறித்துச் செலுத்தும் ஆன்மசக்தி: அதுவே அவனைத் தன் வினை முடிக்குந்தொழில் பற்றித் தூண்டிச் செலுத்தும் யந்திரவிசை. அத்தகைய ஆன்ம சக்தியே அவனைத் தொழிற்படுத்தும் சிறந்த சாதனமுங்கூட. அதுவே அவனது விதியையும் மாற்றி நற்பேறு தரத்தக்க நற்கருவி. இயற்கையறிவுடன் மனத்திட்பமுங் கூடியிருந்தால் அவனது வலிமையைத் தீவினைப் பயனும் மாற்றலரிது. அதனாலேயே தெய்வப் புலவரும்

'வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற'

என்றார்.

இத்தகைய ஆத்மபலம் தெய்வீகம் பொருந்தியதென முன்னமே சொன்னோம். இறைவனும் தனது சங்கற்ப சத்தியினாலேயே செயலரும் செயல்களைச் செய்கிறான். அவ்வாறான சத்தியையே தாம் சிருட்டித்தமைத்த மனிதனுக்கும் ஈந்தருளியிருக்கிறான். அவ்வகைச் சத்திவாய்ந்தவனொருவன் அதனைப் பயன்படுத்தாது விட்டுவிட்டால் அது அவன் குற்றமாமேயன்றி முழுமுதம் கடவுளின் அருட்பெருக்குக்கு ஒரு குறையாகமாட்டாது. ஆகவே இதனை ஒத்ததாய சத்தியைத் தனது வாழ்க்கையில் பயன்படுத்தி முன்னேற்றமடைவது ஒவ்வொரு அறிவாளியின் கடமையாகும். அவனது செயமும், அபசெயமும் அவன் முயற்சியளவேயாகும். இது பற்றியே தெய்வத் திருவள்ளுவனாரும் தமது திருக்குறளில்

" அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்,"

என்றும்,

"தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்,"

என்றும்,

" முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும், "

என்றும்,

" பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி,"

என்றும் மொழிந்தருளியிருக்கிறார்.

உற்சாக சத்தியின் ஆற்றல் அளப்பரிது; கடவுட்டன்மை பொருந்தியது. அது கடவுளின் இயல்புடைத்து. அவர் சத்தி வாய்ந்தது. தம்மைப்போலவே தம் சிருட்டிப்பொருளான அருமைந்தனும் பயன் படைத்து வாழ வேண்டுமென்ற நோக்கங்கொண்டு அவர் அவனுக்கு அளித்தருளிய இம்மனோதிடம்-மனத்தின் மிக்க வலிமை (மனத்திட்பம்)-தக்கவாறு பயின்று பயன்பெறப் பிரயோகப்படுத்தப்பட வேண்டுவது இன்றியமையாதது. மனிதன் ஊக்கமின்றி வாழ்தலரிதாதலால் ஊக்கமே பெருஞ் செல்வமெனக் கருதற்பாற்று. உற்சாகம் படைத்தவரே உயிர் வாழ்வாராவார். அஃதிலார் மரம், மட்டை போல் வாழ்வினும் சீவனற்றவராவர். உடனலங்குன்றி உடல் சோர்ந்து மனம் மெலிவுற்று, நெஞ்சம் வெதும்பி உள்ளம் நைந்து நொந்து நலிந்து 'நடக்கும் பிணம்' போன்ற வாழ்வே அத்தன்மை யுடையவனது கேடுற்ற

வாழ்க்கை. அதனிலும் விலங்கின் வாழ்வு பெரிதும் போற்றத்தக்கதே.

இவற்றை யெல்லாங் கருதியே நாயனாரும்

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்"

என்றும்,

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

என்றும் கூறியுள்ளார். இவை எனைத்தானும் பொய்யாமொழியா மன்றோ! இடுக்கண் வரினும் முயற்சி விடற்பால தொன்றன்று. தளராமல் முயன்று ஊக்கத்துடன் உழைப்பதையே போற்றிக் கூறலாயிற்று. இவ்விடத்தில் தாளாண்மை மிக்க பெருமை வாய்ந்ததோர் தன்மையே—மிகவும் போற்றத்தக்கதொரு பெற்றியே.

இவ்வாறு குற்றங்கடிந்து நன்னெறி பின்பற்றி ஒருவன் அந்நெறியே நின்று அதனினும் கோணாது குறுகாது ஒழுகி வருவானாகில் அவன் வெற்றியே பெறுவான் என்பது திண்ணம். நீண்டதோர் காலத்திற்குள்ளாவது இறைவன் தக்க கூலியை அளித்தருள்வான். இஃது உண்மை (மெய்) உலகினுள்ள பெருமக்களின் சரித்திரங்களெல்லாம் அம்மக்களின் தீவிர விரதத்தையும் திடசங்கற்பத்தையுமே விரித்துக் கூறுகின்றன. ஒருவன் அமைதியாகவோ, ஆடம்பரமாகவோ, விருப்புடனோ, வெறுப்புடனோ ஒரு குறிக்கோளைக்கொண்டு, கடைப்பிடித்து மனவாற்றலுடன் முன் செல்வானேல் அவன் நற்கதியையே அடைவான் என்பதற்குப் பெரியோர்கள் சரிதங்களே தக்க சான்றாகும். பிஸ்மார்க், நெப்போலியன், வில்பர் போர்ச்சு, நெல்சன், கிராண்ட் இவர்களது மேன்மையுள்ள வாழ்க்கையும் இவ்வாற்றானமைந்ததே. அவர்களுடைய நற்கதியைக் கிரகங்களானும் சூரிய சந்திரர்களானும். (காலத்தினாலுங் கூடத்) தடைசெய்ய முடியாதென்றே கூறவேண்டும்.

உலகில் வாழும் பல நன் மக்கள் செயம் பெறாத தன் ஏது அவர்களது கல்விக்குறையல்ல, ஏற்றபெற்றித் தாழ்வல்ல. அவரது உற்சாகக்குறைவே அதற்குக்காரணம். மனச்சோர்வும், தக்கதுணிவின்மையுமே அவர்களைத் தடுத்துப் பாழாக்குகின்றன. அவர்களும் தங்கள் தொழில் மறந்து செயலற்றுச்சோர்வுற்றுப் பயனொன்றும் பெறாது மனம் மாழ்கி இறுதியாக மாய்கின்றனர். இது பெரிதும் வருந்தத்தக்க தொன்றே. விதி வசத்தால் என அவர் நினைக்கின்றனர் போலும்! அவர் 'தாளாளர்க்குண்டோ தவறு' என்னும் பெரியோர் வாக்கை மறந்தார் போலும்!!

இன்னும் ஒரு விடயம். வாழ்க்கைப் பெரும் போரினை உற்றுநோக்குங்கால் ஒருவனது திண்மையின் அளவுக்கேற்ப—அதன் விசையினளவும் அவன் வெற்றியின் அளவுமாம். அது மட்டுமன்று, அவன் கடைப்பிடித்த நன்னெறியினளவுமாம், அஃது (அவ்வெற்றி) ஒருவன் வெற்றிபெற நினைந்தால் அவன் தன் இளமையில் சித்தத்தைப் பண்படுத்தித் திடனாக்கிப் பெரிதும் முயன்று பயின்று பழக்கி விடவேண்டும். அதற்குரிய சாதனங்களைக் கொண்டு சரியான வழிமுறையில் பயிற்சி பெறல் வேண்டும். அதைப் பின்பற்றிப் பயிலலும் வேண்டும்.

நன்றாக.

திரு. கிடாம்பி நாராயணய்யங்கார், பி. ஏ., பி. எல்.

நமது

பத்திரிகை பரவுதற்குப் பாதை என்ன?

வெண்பா

இந்தியா ஏழுலட்சம் ஏற்றகிரா மம்வசித்தும்
வந்தபஞ்சம் தீராத வாறேன்னே!—அந்தோ!
கிராமதூ தன்றன்னைக் கீர்த்தியுறப் பார்த்தே
இராமலிருந் திட்டகுறை ஈது.

சந்தா நேயர்களே! ஓர் கிராமவாசி எமக்கனுப்பி இருக்கிற இவ்வெண்பாவை இரண்டொரு முறை திருப்பி வாசியுங்கள்! இது புலவர் கூற்றின் பாற்பட்ட தற்குறிப்பேற்ற வணியாகும். நமது இந்தியாவில் ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. கிராமங்கள் தோறும் விபசாயத் தொழிலே பிரதானமாகவும் இருக்கின்றன. இருந்தும் என்ன செய்ய? ஒரு கிராமத்தில் ஒருவராவது சந்தாதாரராகச் சேர்ந்திருக்கிறார்களா? அவ்வாறு சேர்ந்திருந்தால் இது வரை ஏழு லட்சம் கிராமதூதன் பத்திரிகை செலவாக வேண்டுமே! இலட்சத்தை ஆயிரக்கணக்காக இறக்கிப் பார்த்தாலுங்கூட ஏழாயிரம் ஆகின்றதே! இதனால் இப் "பத்திரிகை பரவுதற்குப் பாதை என்ன" என்பதைக் கண்டுபிடிக்கும் பொறுப்புப் பெரும்பாலும் சந்தா நேயர்களையே சார்ந்ததாயிருக்கிறது. சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் சிரத்தை எடுத்தால் ஒவ்வொரு புதிய சந்தாவைச் சேர்த்துக் கொடுக்கலாம் அல்லவா? மேலும் இப் பத்திரிகையை வாசிக்கும் சந்தா நேயர்கள் இதில் காணும் நலங்களை எல்லாம் பிறருக்கு எடுத்துக் கூறுவதோடு அவர்களையும் சந்தாதாரராகச் சேரும்படி முயன்றும் சந்தேகந் தோன்றினால், குறையேதும் கண்டால் அதை எமக்கு எழுதவும் வேண்டும்.

நன்றே புரிதல் வேண்டும்; நன்றும்
இன்றே புரிதல் வேண்டும். (ப-ர்)

வள்ளுவர் விவசாய மாண்பு.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—என்ற சந்தம்.

கங்கை முதலான சீவநதி களால்
கனகம் விளையும் வடநாடு;
தங்கு நீர்க் காவிரி போன்ற நதிகளால்
தங்கம் விளையுமே தென்னாடு.

ஆண்மை குன்றிடும் சோதரரே-வே
ளாண்மை குன்றிடும் போதினிலே;
மேன்மை ஈதல் விவசாயம்-அதை
விரும்பிச் செய்தல் சம்ரதாயம்

சாயம் வெளுத்திடும் சோதரரே-விவ
சாயம் வெளுத்திடும் போதினிலே;
தாயகமாகிய நம் நாடு-இதில்
தான்யம் விளைப்பதே மேம்பாடு

ஊரைப் பிடித்தே அரசாளும்-மன்னர்
ஊக்கமாய் வாழ்வதெதனாலே?
ஏரைப் பிடித்தே உழுதிடும் நம்மவர்
ஏற்ற உழைப்பாம் இதனாலே!

உணவு மட்டுமோ? மானத்தைக் காத்திடும்
உடையும் உழவில் உண்டாகும்;
பணவரவுள்ள செல்வம் பெருகிடப்
பஞ்சம் வறுமையும் சென்றேகும்!

மக்கட் பசிதன்னைத் தீர்ப்பதெது-அதை
மண்ணில் வித்திட்டு வளர்ப்பதெது?
தக்க உழவுத் தொழில் ஒன்று-இது
தானே உலகுக் குயிர் நன்று

வணிகர் சத்ரியர் வேதியர்கள்-எல்லாம்
வாழ்வதற் காதர வாவதெது?
அணியும் ஆடைக்கும் ஆடம்பரங்கட்கும்
அத்தனைக்கும் மூல மாவதிது.

சாதம் உண்பதெதனாலேமாண்பீர்! மக்கள்
சாதல் உணவில்லா தாலேகாண்பீர்!
பேதமிங் கிம்மன்னா இல்லன்னா ஆவதேன்?
பேசும் உழவை வெறுப்பது மேன்?

பானையிலே சோறு வெந்ததானால்-உண்டு
பாடுபட்டுப் பணம் சேர்த்திடலாம்;
சேனைத் தளத்துடன் போர்புரிந்து-வென்று
தேசத்திலே ஜெயம் பார்த்திடலாம்!

உழுது வாழ்பவர் வாழ்பவராம்-மற்றோர்
உயர்ந்தும் வாழ்வினில் தாழ்பவராம்
தொழுவோம் வள்ளுவர் சொன்னசொல்லை-உழ
தொழிலில் நம்மை வெல்ல யாருமில்லை! [வுத்

ஓர் இந்தியவாசி.

II. "சீர்வளரும் ; மறை வளரும் ;
திறல் வேந்தர் முடிவளரும் ;
பேர்வளரும் ; வாணிபத்துப்
பெருநிதியம் மிகவளரும்
ஏர் வளரும் ; திருவளரும்;
இசை வளரும் ; கடல் ஆழ்ந்த
பார் வளரும் காராளர்
பயிர் வளரும் திறத்தாலே.''

கம்பர்.

III. 1. ஆடி அமாவாசையில் மழை பெய்தால் அரிசி விற்றவிலை நெல் விற்கும்.
2. ஆடி அமாவாசையில் மழை பெய்தால் அடுத்த அமாவாசை வரையில் மழையில்லை.
3. ஆடி வெப்பல் ஆட்டுக்கிடைக்குச் சமானம்.
4. ஆடி அரவட்டை, அகவிலை நெல்விலை.
5. ஆனி அடை சாரல் ஆவணி முச்சாரல்.
6. கோணிக் கோடி கொடுப்பதிலும் கோணுமல் காணி கொடுப்பது நல்லது.
7. சிந்தின வீட்டிலே சேராது; மங்கின வீட்டிலே வாராது.
8. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்,
9. கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி.
10. கையூன்றியல்லவோ கரணம் போட வேண்டும்?
11. பேசத் தெரிந்தால் பிழைக்க வழியுண்டு.
12. உழுவார் வாழ்வே உயர்ந்த வாழ்வு.
13. தொழுவார் வாழ்க்கை துன்பத்தின் சேர்க்கை.
14. பொருளுடையானைப் பூவுலகு போற்றும்.
15. அருளுடையானை அகனுலகு போற்றும்.

IV. வந்தால், போகாதவை இரண்டு:—புகழ்ச்சியும் இகழ்ச்சியும்.
போனால், வாராதவை இரண்டு:—உயிரும் மானமும்.
வந்து போய்க்கொண் டிருப்பவை இரண்டு:—இன்பமும் துன்பமும்.

மாதர்நீதி.